விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 24 புதன்கிழமை (06.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 170

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஐ.தே.க.-கூட்டமைப்பு

## விரைவில் முக்கிய பேச்சு

### தெரிவுக் குழு விவகாரம் கவனத்தில் எடுக்கப்படுமாம்

(கொழும்பு)

**நாடாளுமன்ற தெரிவுக்குழு விவகாரம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் முக்கியமான பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறவுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது. நியூசிலாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியவுடன் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்றும் அறியமுடிகின்றது.**

நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் இந்த வாரத்துக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ரணில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகளவு உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அதேவேளை நாடு திரும்பிய கையோடு தனது கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களைச் சந்தித்து முக்கிய கலந்துரையாடல் ஒன்றிலும் ரணில் ஈடுபடுவார் எனத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நடைபெறும் இருதரப்பு பேச்சுக்களையடுத்து இருதரப்புகளும் இணைந்து அரசாங்கத்துக்கு முக்கிய அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளன.

நாடாளுமன்றத்தெரிவுக்குழுவில்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை (19ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்காவுக்கு

### அறிக்கை வழங்கவில்லையாம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுக்கு செயற்திட்ட அறிக்கையை வழங்கவில்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இது தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும் முகமாக அமைச்சர் இவ்வாறு பதில் வழங்கினார்.

வெளிவிவகார அமைச்சினால் அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் செயற்திட்ட அறிக்கை ஒன்று கையளிக்கப்பட்டதா என அநுரகுமார திஸாநாயக்க (20ஆம் பக்கம் பார்க்க)

### இளம் பெண் கடத்தல் பொலிஸார் அதிரடி

(யாழ்ப்பாணம்)

கண்டியிலிருந்து வந்த இளைஞர்கள் சிலரால் பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த இளம் பெண் கடத்திச் செல்லப்பட்டு கொடிகாமம் பகுதியில் வைத்து மீட்கப்பட்டிருக்கிறார்.

எனினும் இந்தச் சம்பவம் ஒரு காதல் விவகாரம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தும்பளை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் எக்னெலிகொட எங்கிருக்கிறார் எனத் தெரியாது!

### முன்னாள் சட்டமா அதிபர் சாட்சியம்

(கொழும்பு)

காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட எங்கிருக்கிறார் என தனக்குத் தெரியாதெனவும் அவர் எங்கிருக்கிறார் என்பதை கடவுள் மாத்திரமே அறிவார் எனவும் முன்னாள் சட்டமா அதிபரான மொஹான் பீரிஸ் ஹோமாகம நீதவான் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் எக்னெலிகொட வெளிநாட்டில் உயிருடன் உள்ளார் என ஐ.நா. மாநாடொன்றில் உரையாற்றும் போது மொஹான் பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து இவ்விடயம் குறித்து வாக்குமூலம் அளிக்குமாறு (20ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமாக ஆஸி. செல்ல முயன்ற அனைவருக்கும் நீதிமன்றக் காவல்

(சென்னை)

இந்தியாவின் கேரள மாநிலம் வழியாக அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக தப்பிச் செல்லமுயன்றதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை தடுத்து வைக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட 151 பேரில், 21 பேர், உரிய ஆவணங்கள் இல்லாத குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும், கேரள மாநிலம் கொல்லத்தில் இருந்து கடல் வழியாக, சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்குச் செல்ல முயன்ற போது, கடந்த சனிக்கிழமை இரவு பொலிஸாரிடம் பிடிபட்டார்கள்.

இவர்கள் தமிழ் நாட்டில் இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தியதில் மேலும் பல தகவல்கள் தெரியவந்துள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

### கைத்துப்பாக்கி பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பூட்டப்பட்டிருந்த கடை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைத்துப்பாக்கி ஒன்றும் கைக் குண்டு ஒன்றும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அருகாமையிலுள்ள கடையொன்றிலிருந்தே இவை மீட்கப்பட்டுள்ளன.

கடையின் உரிமையாளரினால் வழங்கப்பட்ட தகவலையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் இவற்றை மீட்டுள்ளனர். (எ-6)

## தனி இராச்சியக் கோரிக்கையை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டனர்

### இந்தியாவுக்கான தூதுவர் விபரிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் தமிழர்கள் தனி இராச்சியக் கோரிக்கையினைக் முழுமையாக நிராகரித்துவிட்டனர். இலங்கையில் பிரிவினைவாதத்துக்கு இனி இடமே இல்லை என இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஒக்டோபர் மாத அமர்வில் எமது மனித உரிமை மேம்பாட்டு அறிக்கையினை சமர்ப்பிக்க உள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் துரதிர்ஷ்ட வசமானது இந்தத் தீர்மானமானது நியூயோர்க் கில் இயங்கும் புலம் பெயர் தமிழ் குழுக்களையும் லண்டனில் இயங்கும் உலகத் தமிழ் மன்றம், நோர்வேயில் இயங்கும் நெடியவனின் இயக்கம் என் பணவுற்றுக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 இன் தொகுப்பாளர் நாடுகடத்தப்பட்டார்!

(லண்டன்)

பிரித்தானியாவை தளமாகக் கொண்ட சனல் 4 தொலைக்காட்சியின் தொகுப்பாளர் சிராணி சபாரட்னம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டதாக தெரியவருகின்றது.

சனல் 4 தொலைக்காட்சியின் பணிப்பாளர்களில் ஒருவரான ஸ்ருவார்ட் கொஸ்குறோவை திருமணம் செய்த வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது கணவருடன் பிரித்தானியாவிலிருந்து டுபாய் ஊடாக நேற்று கொழும்பை வந்தடைந்தார்

இவரின் பெயர் கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவர் தடுத்து வைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டதாக கொழும்புச் செய்திகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## கொண்டலடி விநாயகர் ஆலயத்திலிருந்த 2 வாகனங்கள் அதிகாலையில் திருட்டு

### தொடரும் களவால் சைவ மக்களிடையே அதிர்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்.வடகிழக்கு கொண்டலடி விநாயகர் தேவஸ்தானத்திலிருந்த (யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில்) மரத்திலான வாகனங்கள் இரண்டு நேற்று அதிகாலை திருட்டுப் போயுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான இடபம், குதிரை வாகனங்களே இவ்வாறு திருடப் பட்டுள்ளன.

அதிகாலை 2 மணியளவில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்விசாரா ஊழியர்கள் தொடர் வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று தொடக்கம் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

சம்பள உயர்வுகோரி அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்களினால் இப் போராட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்திலும் இன்று தொடக்கம் தொடர்ச்சியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு சகல வகை போதனைசாரா ஊழியர்களுக்கும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

பாதுகாப்பு ஊழியர்கள் மட்டும் அன்றைய தினம் கடமையில் ஈடுபடுவர். மாணவர்கள் விடுதிகளுக்கான நீர்வழங்கல் சேவை தடைப்படாவண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அச்சங்கம் தெரிவித்துள்ளது. (எ-11)

# எரிபொருள் விலை குறைப்பு தொடர்பாக ஆராயப்படும்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு



உலக சந்தையில் எரிபொருள் விலை தொடர்ந்து குறையுமானால், இலங்கையிலும் எரிபொருள் விலை குறித்து கவனத்தில் கொள்ளப்படும் என பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

உலக சந்தையில் தற்போது எரிபொருள் விலை குறைவாக உள்ளதால் இலங்கையிலும் எரிபொருள் விலை குறைக்கப்படுமா என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் சில காலத்திற்கு இந்நிலைமை தொடருமானால் நாம் இது குறித்து கவனத்திற் கொள்வோம். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பல்வேறு அரச நிறுவனங்கள் செலுத்த வேண்டிய 65 பில்லியன் ரூபாயை இக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவது குறித்து .திறைசேரி ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ-11)

# மடம் வீதியில் குழு மோதல் பலர் காயம்;பொலிஸ் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

மடம் வீதியில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாள்வெட்டில் அப் பகுதி எங்கும் பெரும் களேபரமாக காணப்பட்டது.

இவ் வாள் வெட்டுச் சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர் குழுக்களுக்குமிடையிலேயே இவ் வாள் வெட்டு இடம்பெற்றுள்ளது.

இவ் வாள்வெட்டுச் சம்பவத்தில் ராதா கவிதா (வயது 26) என்ற இளம் பெண்ணின் கழுத்தில் வெட்டுக் காயத்துடனும், வெற்றிவேலாயுதம் (வயது 56) என்பவர் தலையின் பின் பகுதியில் வெட்டப்பட்ட நிலையிலும் அவரது மகனான வே.பகீரதன் (வயது 24) என்பவர் கையில் வெட்டப்பட்ட நிலையிலும் இவரது மனைவியான 6 மாத கர்ப்பிணியான ப.காயத்திரி என்பவரும் வெட்டுக் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களது வீட்டில் நுழைந்த பெண்கள் உட்பட 20 பேருக்கும் மேற்பட்டோர் குறித்த நால்வரினையும் வாள்களினால் வெட்டியுள்ளனர்.

குறித்த குடும்பத்ினரை வெட்டியதோடு அங்கிருந்த மின்சார உபகரணங்களை சேதப்படுத்தியதோடு; அங்கு வளர்க்கப்பட்ட 30 இற்கும் மேற்பட்ட புறாக்களையும் கழுத்து நசித்துக் கொன்றுள்ளனர்.

மற்றைய குழுவின் விஜயராஜா விக்னராஜா (வயது 27) என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இம் மோதல் சம்பவம் பொலிஸாரினையும் மீறிச் செல்லவே மேலதிக பாதுகாப்பிற்காக சம்பவ இடத்திற்கு ஆயுதம் தாங்கிய படை வீரர்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இம் மோதலுக்கு இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறே காரணம் எனவும் படுகாய மடைந்த குடும்பஸ்தர்களில் இருவர் சிவில் பாதுகாப்பு குழுவினைச் சேர்ந்தவர்களென்றும் உறவினர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருவதோடு குறித்த வாள்வெட்டில் ஈடுபட்டவர்களில் 4 இளைஞர்களினை கைது செய்துள்ளனர். (எ-4)

# குழந்தையை வீசிய தாய்க்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

தனது குழந்தையினை பற்றைக்குள் வீசியெறிந்த தாய்க்கு யாழ்.நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கடந்த மாதம் ஈச்சமோட்டை கடற்கரை வீதி பாசையூரிலுள்ள வெற்றுக் காணியொன்றில் பிறந்து ஒரு நாளேயான குழந்தையினை வீசியெறிந்துள்ளார்.

குறித்த தாய் யாழ். சிறுவர் பெண்கள் பிரிவினரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைகப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று யாழ் நீதவான் மா. கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் பிரஸ்தாப பெண்ணின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி மு.றெமிடியஸ் குறித்த பெண்ணை பிணையில் விடுவிக்கக்கோரி பிணை விண்ணப்பம் செய்திருந்த நிலையில் வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித் பெண்ணை 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட் பிணையில் செல்ல அனுமதித்தார்.

குறித்த தாய் வீசியெறிந்த குழந்தை யாழ். போதனா வைத்தியசாலையில் நலமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)


கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட உருட்டிய தும்புத்தடி (4 அடி நீளம்) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புக்கு: 0774631224

021 321 1735

(8575)



ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்

வகுப்புகள்: சனி,ஞாயிறுகளில்...

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093

E-mail: alliancejaffna@yahoo. com

(ருக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.

(8572)


# மரண அறிவித்தல்

## திருமதி ராஜேஸ்வரி சோமசுந்தரம் (தாத்தோ)



ராஜஸ்தான் வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ்வரி சோமசுந்தரம் 05.06.2012 நேற்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஏகாம்பரம் சோமசுந்தரத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருமதி மகேஸ்வரி பொன்னம்பலம், திருமதி பரமேஸ்வரி வல்லிபுரம், திருமதி புவனேஸ்வரி இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரியும் மற்றும் திருமதி நாகேஸ்வரி பொன்னம்பலம் (கனடா), கமலேஸ்வரி குணசிங்கம் (லண்டன்), திருமதி நகுலேஸ்வரி தம்பையா(லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் வதிரியில் உள்ள அவரது இல்லத்தில் 07.06.2012 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக ஆலங்கட்டை குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வதிரி, கரவெட்டி.

T.P.: 021 300 1747

தகவல்:

சு.தம்பையா குடும்பத்தினர் (சபா)

(அ-173)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




0.30, 2.30, 6.30, 9.30



உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் DMI சர்வதேச கொம்பனிக்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை.

Distributor Supervisor

Asst.Manager Admin.Officer

தகைமை குறைந்தபட்சம் O/L சித்தி

6 மாத கால பயிற்சி வழங்கப்படும்.

பயிற்சியின்போது 12000/=-18000/= வரை ஊதியம் பெறலாம்.

பயிற்சியின் பின் 35000/=-45000/= வரை பெறலாம்.

தொடர்புகளுக்கு:

0776219536, 0754262907

(8577)


02.05.2012 இல் அகவை அறுபதில் தடம் பதித்த சபைத் தலைவரின்

# மணிவிழா வாழ்த்து மடல்

## திரு.பசுபதி சீவரத்தினம்

### தலைவர், பனை அபிவிருத்திச் சபை



மக்களின் தோழர் மகத்தான சேவையாளர்
மாபெரும் சபையின் தலைவர் மதிநுட்பக்காரர்
பசுபதி சீவரத்தினம் பார் போற்றும் மனிதர்
அறுபது அகவை கண்ட அற்புத வாழ்வு வாழி

தானுண்டு தன் பணியுண்டு எனும் மனித வாழ்வில்
நானுண்டு நல்வழி காட்டலுடன் பயணம் தொடர
ஏனின்னும் உறக்கம் இது பாதை எழுந்து நடவென
ஏற்றம் காண உழைக்கும் சோதியே வாழி வாழி

மக்களின் துயர் துடைக்கும் மகத்தான தலைவரே
மாண்புமிகு திட்டங்கள் படைத்த தலைவரே
வேதனைகள் தாங்கி சோதனைகள் வென்று பல
சாதனைகள் சாதித்த தலைவரே நீடூழி வாழி

எச்சபை நின்றாலும் எழுந்திடும் உங்கள் குரல்
அச்சபை மகிழ்ந்து ஆர்ப்பரிக்கும் கரகோசம்
இச்சபையின் மன்னன் எப்பொழுதும் எத்தினமும்
உச்சம் எய்தி உயர்வுடன் பல்லாண்டு வாழி வாழி

(சி-165)

பணியாளர்கள்,

பனை அபிவிருத்திச் சபை

# இன்று ஒரு தகவல்

## அசோகச்சக்கரவர்த்தி

ஒருநாள் அசோக மன்னர் உலா வந்து கொண்டிருக்கிறார்.

அவர் அருகில் ஆலோசகர்கள் அனைவரும் படை சூழ வந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தச் சமயத்தில் எதிரில் புத்த பிக்கு ஒருவர் வந்தார்.

புத்த பிக்குவைப் பார்த்ததும் அசோக மன்னன் ஓடிப்போய் அவரது காலில் விழுந்து வணங்கினார்.

அவ்வேளையில் அசோக மன்னரின் தலை அந்த பௌத்த துறவியின் பாதத்தில் பட்டது.

இந்தக் காட்சியைக் கண்ட அமைச்சருக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியது. அவர் மிகவும் மனம் வருந்தினார்.

"நமது அசோகச் சக்கரவர்த்தி எவ்வளவு பெரியவர்! அவருடைய தலை ஒரு சந்நியாசியின் பாதத்தில் படுவதா?" என்று நினைத்து அமைச்சர் மிகவும் கவலைப்பட்டார்.

அரண்மனை திரும்பியதும் அமைச்சர் மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

"அரசே! நான் மிகவும் வருத்தப்படுகிறேன்!" என்றார். "எதற்கு நீங்கள் வருத்தப்படுகிறீர்கள்?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"அசோகச் சக்கரவர்த்தியின் சிரம் மிகவும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஒன்று. அது ஒரு சந்நியாசியின் காலில் படுவதா" என்று அமைச்சர் வினவினார்.

அதற்கு மாமன்னர் எதுவும் கூறாமல் புன்னகை செய்துவிட்டு அங்கிருந்து சென்று விட்டார்.

அதன்பின்னர் அசோகச் சக்கரவர்த்தி ஒரு சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்.

அவர் ஒருநாள் அமைச்சரவைக் கூப்பிட்டு எனக்கு மூன்று சிரங்கள்... அதாவது தலைகள் வேண்டும்! என்று கட்டளை பிறப்பித்தார்.

"முதலில் ஓர் ஆட்டின் தலை... இரண்டாவது ஒரு புலியின் தலை... மூன்றாவது ஒரு மனிதனின் தலை... இந்த மூன்று தலைகளையும் நீ எங்கிருந்தாவது கொண்டு வா" என்று அரசர் கூறினார்.

அமைச்சர் அதற்கு இசைந்து உடனே புறப்பட்டார்.

அவருக்கு ஆட்டுத் தலை உடனே கிடைத்தது. சிறிதுநேரம் செல்ல சிரமப்பட்டு காட்டில் இருந்து ஒரு புலித் தலையையும் சேகரித்தார். அவர் அதன் பின்னர் ஒரு சுடுகாட்டிற்குப் போய் ஒரு மனிதத் தலையும் சேகரித்தார்.

இந்த மூன்று தலைகளையும் எடுத்துக்கொண்டு அவர் அரசரிடம் வந்து சேர்ந்தார்.

"அரசே! உங்கள் ஆணைப்படி மூன்று தலைகளையும் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார்.

அவற்றைப் பார்த்த அசோக மன்னர் "மிகவும் நல்லது. இப்போது இந்த மூன்று தலைகளையும் எடுத்துக்கொண்டு போய் சந்தையில் விற்றுவிட்டு வாருங்கள்" என்று கூறினார்.

அமைச்சர் மூன்று தலைகளையும் எடுத்துக்கொண்டு சந்தைக்குச் சென்றார்.

சந்தையில் ஆட்டுத்தலையை வாங்குவதற்குப் பலர் முன் வந்தனர். உடனே அது விற்றுவிட்டது.

அடுத்தபடியாக புலித்தலையை ஒருவர் வாங்கிக் கொண்டார்.

அந்தச் சந்தையில் மனிதத் தலையை மட்டும் வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. அதை எல்லோரும் பார்த்துவிட்டு விலகிச் சென்றார்கள்.

அமைச்சர் அரசரிடம் திரும்பி வந்து "அரசே! இந்தத் தலையை மட்டும் யாரும் வாங்கமாட்டேன் என்கிறார்கள்" என்றார்.

அதைக்கேட்ட அரசர் "சரி... பரவாயில்லை! அதை இனாமாகவே கொடுத்துவிடுங்கள்" என்றார்.

அமைச்சர் மறுபடியும் சந்தைக்குச் சென்று இலவசமாகத் தருகிறேன்... இதை வாங்கிக் கொள்ளுங்கள்... என்றார்.

அப்போது அதை யாரும் வாங்குவதற்கு முன்வரவில்லை. எனக்கு வேண்டாம்! எனக்கு வேண்டாம்! என்று சொல்லி எல்லோருமே முகத்தைத்திருப்பிக் கொண்டு சென்றார்கள்.

அமைச்சர் மறுபடியும் அரண்மனைக்கு திரும்பி வந்து மன்னனிடம் கூறினார்.

அப்போது அசோகச் சக்கரவர்த்தி சொன்னார்; அமைச்சரே உயிர் இருக்கும் வரையில்தான் இந்தத் தலைக்கு மதிப்பு. உயிர் பிரிந்த பின்னர் அதன் மதிப்பும் போய் விடுகிறது. அதனால் மதிப்பு இருக்கும்போதே பெரியவர்கள் பாதம் பணிந்து அவர் புனிதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.

பணிவு என்பது வேறு... அடிமைத்தனம் என்பது வேறு... பெரியவர்களைப் பணிவது நமக்குப் பெருமை தரக்கூடிய ஒரு விடயமாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வைத்தியர்களுக்காக காத்திருக்கும் நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலை

(முல்லைத்தீவு)

வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு வைத்தியர் இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பிரதேசத்தில் 3 ஆயிரத்து 500 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவ் வைத்தியசாலைக்கு தினமும் 350 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகை தருகின்றனர்.

இவ் வைத்தியசாலைக்கு வைத்தியர் இன்மையால் உதவி மருத்துவர் ஒருவர் பணிபுரிகின்றார். அம் மருத்துவருக்கும் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படாமையால் கடந்த 5 நாட்களாக அவ் வைத்தியரும் வைத்தியசாலைக்கு வருகை தருவதில்லை.

இதனால் நோயாளர்கள் பெரும் அவலநிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவ்வைத்தியசாலைக்கு இரண்டு மருத்துவ தாதிமார் தேவைப்படுகின்றபோது ஒரு மருத்துவ தாதியே கடமையாற்றுகிறார்.

அம்புலன்ஸ்வண்டி வசதி, ஆண், பெண் நோயாளர் விடுதி வசதி ஆகியவை இருக்கின்ற போதும் வைத்தியர் பற்றாக்குறையே பெரும் பிரச்சினையாகவுள்ளது.

இவ் வைத்தியசாலைக்கு வைத்தியர் இன்மையால் 40 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கே போக்குவரத்து மற்றும் பணச் செலவுகளை எதிர்கொண்டு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து வைத்திய சேவையை சீராக்க வைத்தியரை நியமிக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் நோயாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-267)

## திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் 5 இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருட்டு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்டபட்ட மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் திருடர்கள் இலத்திரனியல் பொருட்கள் வைத்திருந்த அறையினை உடைத்து 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலையை மூடிவிட்டு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலைக்கு வருகை தந்தபோதே இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக தெரியவந்துள்ளது.

ஆரம்பக் கல்வி வகுப்பறை கதவை உடைத்து அதனூடாக பிரதி அதிபரின் அறைக்கு சென்று அங்கிருந்த திறப்புக் கோர்வையினை எடுத்துச் சென்று இலத்திரனியல் அறைக்குள் இருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக பாடசாலை அதிபர் எஸ்.சூசைநாதர் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் மாங்குள பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்துள்ளரார். சம்பவ இடத்துக்கு சென்ற வலயக்கல்விப் பணிப்பாளரும் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இப்பாடசாலைக்கு காவலாளி இல்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ-3-15)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 120 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 60-100 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 70-80 | 80 | 90 | 100 |
| தக்காளி | 180 | 160 | 150 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 30 | 35 |
| கோவா | -- | 60 | 60 | 70 |
| கரட் | 100 | 120 | 100 | 110 |
| பூசணி | 25 | 30 | 30 | 30 |
| புடோல் | 60 | 40 | 50 | 70 |
| வாழைக்காய் | 25-30 | 20 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 120-130 | 50-120 | 100 | 130 |
| பெரிய வெங்காயம் | 85 | 100 | 90 | 90 |
| பாகற்காய் | 70 | 150 | 150 | 80 |
| வெண்டிக்காய் | 50-60 | 90 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 60 | 90 |
| பயற்றங்காய் | 50 | 120 | 150 | 40 |
| லீக்ஸ் | 150 | 140 | 120 | 160 |
| பீற்றூட் | 60 | 100 | 90 | 110 |
| கறிமிளகாய் | 70 | 120 | 100 | 140 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 300 | 160 |
| போஞ்சி | -- | 140 | -- | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 25 | 10 |
| தேசிக்காய் | 130-140 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 20-30 | 16-20 |

## இராசி பலன்

06.06.2012

(வைகாசி 24, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு

துதியை பிற்பகல் 1.07 மணிவரை

மூலம் முற்பகல் 8.46 மணிவரை

இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

சுபநேரம் 4.22-5.52 மணிவரை

**மேடம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வெளியூர் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும்.

**கடகம்** மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய பொருட் சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**கன்னி** பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், பெற்றோரின் பாச மழையில் நனையும் வாய்ப்புண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், எடுத்த காரியத்தை முடிக்க சகோதரர் வழியில் உதவிகள் கிடைக்கும், சேமிப்பை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும்.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், உறவினர் வருகையுண்டு, நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும், வாய்ப்புக்கள் அதிகரிக்கும், முயற்சிகளில் அதிக பிரயாசை எடுப்பீர்கள்.


**தனுசு** ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, சிலரது நம்பிக்கையைப் பெறுவதற்காக இரவு, பகல் பாராது பாடுபடுவீர்கள், தாராளமாகச் செலவுகள் செய்து மகிழும் நாள்.

**மகரம்** வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள், அதிக அலைச்சல்கள் ஏற்படலாம், பயணங்களால் பலன் கிடைக்கும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், பிறருக்கு உதவும் எண்ணம் தோன்றும்.

**கும்பம்** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், தொழில் நன்மை கருதி எடுத்த முயற்சியால் ஆதாயம் பெறுவீர்கள், போசன சுகமுண்டு, அந்நியர் உதவியுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

வளவன்



# உயிர் மீண்ட காளை மாடு 20

30.03.2012, 16.04.2012 ஆகிய திகதிகளில் நடந்த காளைமாட்டு வழக்கில், யாழ். அரச அதிபர் மற்றும் எதிர்த்தரப்புச் சட்டத்தரணி, வழக்காளி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆகியோர் நீதிமன்றில் சமர்ப்பித்த அறிக்கைகளின் விபரங்களை 18,19 ஆம் தொடர்களில் வாசித்தீர்கள்.

25.03.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று வெட்டப்படவிருந்த காளைமட்டை வெட்டுவதற்குப் பொலிஸாரால் தடைவிதிக்கப்பட்டதை அடுத்து, 30.03.2012 இல் வழக்கு விசாரணை இடம்பெற்றது.

இவ் வழக்கு விசாரணை யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 16.04.2012 வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன் காளைமாட்டிற்கு எந்தவித ஊறும் விளைவிக்காத வகையில் அந்தக் காளைமாட்டைப் பராமரிக்க வேண்டும் என்ற கட்டளையையும் நீதிபதி விதித்திருந்தார்.

### ஆலயங்களுடன் தொடர்பு

30.03.2012 இல் ஆரம்பித்த காளைமாட்டு வழக்கின் அடுத்த தவணை 16.04.2012 ஆக இருக்கையில், காளைமாட்டைக் கொள்வனவு செய்வது யார்? அவ்வாறு கொள்வனவு செய்தால் எங்கே பராமரிப்பது என்ற கேள்விகள் எழுகின்றன.

இச் சந்தர்ப்பத்தில், யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம், உபசெயலாளர் எஸ்.சிவகுமார், ஈ.எஸ்.பி.நாகரட்ணம், மகாராணி சோமசேகரம், அடியார்களுக்கு அமுதூட்டும் அண்ணலார் கு.க. சிவபாலன் ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளப்பட்டது.

காளைமாட்டைக் கொள்வனவு செய்வதற்கு யாழ்ப்பாண வணிகர் கழகம் உதவ முடியும் என்ற செய்தி தெரியப்படுத்தப்படுகின்றது.

காளைமாட்டின் கொள்வனவிற்கு வணிகர்கழகம் உதவி செய்தால் அதற்கு அடுத்தபடியாக இருக்கக்கூடிய பெரிய பிரச்சினை காளைமாட்டைப் பராமரிப்பது ஆகும்.

யானை போன்ற காளைமாட்டைப் பராமரிப்பது என்பது சாதாரண விடயமல்ல. ஒரு நாளைக்கு அதற்குத் தேவையான உணவு எவ்வளவு என்பதை ஏற்கனவே தெரிந்திருந்தோம். இது தவிர 14இஞ்சி வாளியால் 15 வாளி தண்ணீர் காளைமாட்டின் ஒரு நாளைக்கான குடிநீர் ஆகும்.

இவற்றையெல்லாம் செய்து முடிப்பதற்கு அப்பால், பூச்சி மருந்து , காய்ச்சல் மருந்து என்ற மருந்துப்பட்டியலும் இருக்கவே செய்கிறது. எதுவாயினும் கோலம் போட்டாயிற்று. வழக்கு நடக்கிறது. பராமரிப்பு ஏற்பாடுகளைச் செய்தாகவேண்டும்.

காளைமாட்டைப் பராமரிக்கக்கூடிய இடங்களைத் தெரிவு செய்து உரியவர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

அதில் காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் அறங்காவலர் மகாராணி சோமசேகரம் அவர்கள் ஏற்கனவே அங்கு பசுமாடுகளை பராமரித்து வருகின்ற அடிப்படையில், வியாவில் ஐயனார் கோவிலில் இந்தக் காளைமாட்டைப் பராமரிக்க முடியுமா? என்று வினவப்பட்டது.

அங்கிருக்கக்கூடிய குடிநீர் மற்றும் பச்சைப் புல் பற்றாக்குறை காரணமாக, வியாவில் ஐயனார் கோயிலில் 'காளைமாட்டைப் பராமரிக்க முடியாது போக ஈழத்துச் சிதம்பரத்தில் பராமரிக்கலாம் என்ற நினைப்பில் தொழிலதிபர் ஈ.எஸ்.பி நாகரத்தினம் அவர்களோடு தொடர்பு கொள்ளப்பட்டது.

எனினும் வியாவில் ஐயனார் கோயிலுக்கு இருக்கக்கூடிய இடைஞ்சல்கள் ஈழத்துச் சிதம்பரத்திலும் இருப்பதனால் அந்த முயற்சியும் கைகூடவில்லை. இந்நிலையில், யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம், உபசெயலாளர் எஸ். சிவகுமார் ஆகியோருடன் தொடர்பு கொண்டு கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தில் காளைமாட்டைப் பராமரிக்கலாம் எனக் கருதப்பட்டது.

மகாதேவ ஆச்சிரமத்தில் ஏற்கனவே பசுமாடுகள் இருப்பதனால் இந்தக் காளைமாட்டை அங்கு கொண்டு செல்வது நல்லதெனக் கருதப்பட்டாலும்,

வடக்கு மாகாணக் கால்நடை உற்பத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. அமிர்தலிங்கம் அவர்களின் ஆலோசனைப்படி அது கைவிடப்பட்டது.

குறித்த காளைமாட்டின் மூலம் இயற்கையான இனப்பெருக்கம் நடப்பதாக இருந்தால் குறைந்தது 600 கிலோகிராம் எடையுள்ள பசு மாடு தேவைப்படும் என்பதால் அதற்கான சாத்தியம் இன்றி மகாதேவா ஆச்சிரமத்திற்குக் காளை மாட்டைக் கொண்டு செல்லும் முயற்சியும் தோற்றுப் போனது. இந்நிலையில் வலம்புரி 29.03.2012 திகதிய ஆசிரிய தலையங்கத்தில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் இந்தக் காளை மாட்டைப் பராமரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து எழுதியிருந்தது.

## காளைமாட்டை பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள்

யாழ்ப்பாணத்தில் இப்போது காளைமாட்டு விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

திருநெல்வேலி அரச கால்நடைப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வந்த ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த நல்லிணக் காளை மாட்டை கொள்வனவு செய்தவர் அதனை இறைச்சிக்காக வெட்டுவது தொடர்பில்,

விளம்பரத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டமை மற்றும் காளை மாட்டை காட்சிப்பொருளாக்கியமை தொடர்பில் இந்து மதத்தவர்கள் தங்கள் ஆழ்ந்த கவலையை யாழ். அரச அதிபருக்குத் தெரிவித்தனர்.

இதனையடுத்து காளைமாடு வெட்டப்படுவது தடை செய்யப்பட்டது.

காளைமாடு வெட்டப்படுவது தடைசெய்யப்பட்டால், அதனைக் கொள்வனவு செய்தவரிடமிருந்து மீள் கொள்வனவு செய்து அதனைப்பராமரிப்பது கட்டாயமானதாகும்.

நியாயத்துவ அடிப்படையில் காளைமாட்டை கொள்வனவு செய்தவர், தனித்து நட்டமடைவதை அனுமதிக்க முடியாது.

எனவே, குறித்த காளை மாட்டை மீள் கொள்வனவு செய்து அதனை நல்லமுறையில்- இந்து மக்களின் வழிபாட்டிற்குரியதாக பராமரிக்கும் புண்ணியப் பணியை இந்து அமைப்புகள் செய்தாக வேண்டும்.

இதில் யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய வரலாற்றுப் பெருமைமிக்க சிவன் கோவில்கள் இந்தக் காளைமாட்டை பராமரிக்கும் பணியை மேற்கொள்ளலாம் என்பது பொதுவான கருத்தாக உள்ளது.

உதாரணமாக கீரிமலை தற்போது ஒரு சுற்றுலாத்தலமாக இருப்பதனால் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், குறித்த காளைமாட்டை பராமரிக்கும் பட்சத்தில் அங்கு செல்கின்ற யாத்திரிகர்கள் மற்றும் பிதிர்க் கடன் நிறைவேற்றுபவர்கள் காளைமாட்டைப் பார்வையிடவும்- வழிபடவும்- அதற்குப் பச்சிலைகொடுத்து நம் முன் வினைஅறுக்கவும் வாய்ப்பு ஏற்படும்.

தேவைப்பாயின் காளைமாட்டை பார்வையிடுபவர்கள் அதன் பராமரிப்புச் செலவுக்காக நிதி உதவியைச் செய்யவும் முன்வருவார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெட்டப்படவிருந்த அந்த மிகப்பெரிய காளை மாட்டின் உயிர் பாதுகாக்கப்பட்டதற்குள் ஏதோ ஒரு தெய்வீகசக்தி உண்டென்றே கருதவேண்டும்.

அந்தக் காளைமாட்டைப் பார்வையிடுபவர்கள் சிவாலயங்களின் பலிபீடத்தில் உள்ள கருங்கல்லாலான நந்தியைப்போல் இருப்பதாகக் கூறுகின்றனர்.

கடல் நீரில் உப்புக்கலந்திருப்பதை நாம் கண்களால் கண்டதில்லை. ஆனால், அதனை ஏற்றுக்கொள்கின்றோம் அல்லவா?

அதுபோல, வெட்டப்படவிருந்த இந்தக் காளைமாடு காப்பாற்றப்பட்ட சந்தர்ப்பம், அதன் உயரம், அதன் வடிவம் யாவும் அதற்குள் ஏதோவொரு தெய்வீகச் சக்தி இருப்பதை உணர்த்துகின்றது.

எனவே, இந்தக் காளைமாட்டை, சிவாலயத்தில் வைத்து பராமரிப்போம். அது பெரும் புண்ணியப்பேறாகும். வாருங்கள்.

(இது 29.03.2012 வலம்புரி ஆசிரியர் தலையங்கம்)

(வளரும்)

விதுரன்

# வாயுமூலம் எரியூட்டு மயானம் திறக்கப்படுவது எப்போது?

## வரியிறுப்பாளர்கள் கேள்வி

(பூந்தோட்டம்)

பூந்தோட்டத்தில் 42 மில்லியன் ரூபா பெறுமதியில் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நவீன வசதிகள் கொண்ட வாயுமூலம் எரியூட்டும் மயானத்தை மக்கள் பாவனைக்கு எப்போது வவுனியா நகரசபை கையளிக்கும் என வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் வரியிறுப்பாளர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கடந்த மே மாதம் 28 ஆம் திகதி மயானம் திறக்கப்படும் என வரியிறுப்பாளர்களுடனான சந்திப்பில் நகரசபை தலைவரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பின்னர் கடந்த 31 ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் நகரசபை உபதலைவரினால் இன்று திறக்கப்படும் என ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அன்றைய தினமும் திறக்கப்படும் என எமக்கு தெரியவில்லை.


அம் மயானம் அரசாங்கத்தினால் கட்டி முடிக்கப்பட்டு பல மாதங்களாக யார் திறப்பது, யார் நினைவுக்கல் வைப்பது போன்ற செயற்பாடுகளினால் நகரசபையின் தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் இந்நிகழ்வை நடத்தாது இருப்பது மக்களுக்கு செய்யும் பெரும் துரோகமாகும்.

எனவே, உடனடியாக நீங்கள் தலையிட்டு மக்கள் பாவனைக்கு மயானத்தை திறந்து விடும் படி கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வரியிறுப்பாளர் சங்கத்தினால் வட மாகாண ஆளுநர், வவுனியா அரசாங்க அதிபர் மற்றும் நகரசபை தலைவர், உபதலைவர், உறுப்பினர்களுக்கும் செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.


(அ-9-266)

## இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



**பன்னிரண்டாம் திருவிழா (06.06.2012)**

**தன்னிகரில்லா உலகப் பெருமஞ்சம்**



நொச்சியம் பதியவனாம்
நொச்சி யொல்லை மதியழகனாம்
தன்னிகரில்லா நாயகனாம்
தரணியிலே முதல் உதித்த பெரு மஞ்சத்திலே
தனி விழா எடுக்கும் இனிய நாளல்லவா
காங்கேசன் துறை சாலை தொட்டு
கதிர் காமக் கந்தன்வரை புகழ் பாடும்
ஆறுமுகப் பெருமானுக்கு அலங்கார நாயகனுக்கு
இணுவைக்கே பொருள் சேர்க்கும் பெருமஞ்சத்தில்
இணுவைக்கே புகழ் பாடும் உலகப் பெருமஞ்சத்தின்
ஆனி மஹோற்சவத்தின் பன்னிரண்டாம் நாளல்லவா



V.V. சஜிந்தன்
S.S. இணுவில் கந்தன்

**12ஆம் திருவிழா உபயகாரர்**

(சி-081)

## விழிப்புணர்வு செயலமர்வு

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் 27 பிரதி அதிபர்கள், ஆசிரியர்களுக்கான உட்படுத்தல் கல்வி தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.பங்கயச்செல்வன் அறிவித்துள்ளார்.

(அ-3-15)

## கழகங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்


(கரவெட்டி)

கரணவாய் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மின்னொளியிலான கரப்பந்து கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைமேற்கொள்ளுமாறு அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது. (அ-3-24)

# அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ உலகப் பெருமஞ்சத் திருவிழா

இணுவில் கந்தசுவாமி தேவஸ்தான மஞ்சத்திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. மாலை 6 மணிக்கு விசேட வசந்த மண்டபப் பூசையும் 7 மணிக்கு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராய் வீதி வலம் வரும் நிகழ்வும் விசேட மேளக் கச்சேரியும் இடம்பெறும்.



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயமான இணுவில் கந்தசுவாமி கோயிலில் இன்று மஞ்சத்திருவிழா. இந்த மஞ்சம் மிகவும் பழைமை வாய்ந்த சரித்திரப் பெருமை மிக்க அழகிய சிற்பங்களை கொண்ட மஞ்சமாகும். இது இழுக்கமுடியாதிருந்த போது 1982 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துப் பேர்போன கலைஞர்களாலே புனர் நிர்மாணஞ் செய்யப் பெற்றது. இந்த மஞ்சம் 40 அடி உயரமுடையது. புகழ் பூத்த இந்திய சிற்பாசாரியார்களால் வடிவமைக்கப்பட்ட இந்தமஞ்சம் உலகப் பெருமஞ்சமாகும். இந்த மஞ்சத்தைப் போல வேறு எங்குமே காணமுடியாது.

நூற்றாண்டுகள் கடந்து கலைப் பொக்கிஷமான உலகப் பெரு மஞ்சத்தின் வ டம் பிடித்திழுத்திட பக்தர்கள் அனைவரும் வாரீர்! வாரீர்!!

அண்ணா தொழிலகம்



இணுவில்
தொ.பேः-021 224 1565

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்
ஈஸ்வர பகவான் அன் கம்பனி
தொ.பே:-021 222 7603
021 222 2350



91,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக் காரியாலயம்
226,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 4353
கிளை
சுன்னாகம்
கே.கே.எஸ் வீதி.
மதவடி முன்பாக
T.P:-0212 242 022
0714546956

## மந்திகை வைத்தியசாலைக்கு புதிய வைத்தியர் நியமனம்

(கரவெட்டி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகராக டி. வினோதன் கடந்த 2 ஆம் திகதி முதல் பதவியேற்றுள்ளார்.

இவர் தெல்லிப்பளை வைத்தியசாலையில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நீண்டகாலமாக வைத்திய அத்தியட்சகர் இன்றி இயங்கி வந்தது என்றும் அப்பணியை பதில் வைத்திய அத்தியட்சகராக பணியாற்றிய எஸ். சுலோக்குமார் மேற்கொண்டு வந்த நிலையில் இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-3-24)

# தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலை எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்

## யாழ். நீரியல் வளத்திணைக்களம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை மீனவர்கள் எமது கடற் பிரதேசத்திற்குள் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் எனத் தமக்குள்ளே பேசிக் கொள்வதனை விட அப்பிரதேச கூட்டுறவுச் சமாசங்கள் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் தமது பிரச்சினையைத் தெரிவித்தால் தாம் உரிய நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். கணேஷமூர்த்தி தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களினைப் பயன்படுத்தி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்த உள்ளூர் மீனவர்கள் ௧கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களிலும் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதற்குச் சில கூட்டுறவுச் சமாசங்களும் கடற்றொழிலாளர்களும் தமது எதிர்ப்பினைத் தெரிவித்திருந்ததோடு தென்னிலங்கை மீனவர்கள் எமது கடற் பிரதேசத்தில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதோடு எமது கடல் வளத்தினையும் அழிக்கின்றனர்.

இவர்களைக் கண்ணுக்குத் தெரியாத நீரியல் வள திணைக்களத்தினர் உள்ளூர் மீனவர்களை மட்டும் எவ்வாறு மடக்கிப் பிடிக்கின்றனர் என கேள்வி எழுப்பினர்.

இக்கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழிலாளர்களோ அல்லது கூட்டுறவுச் சமாசங்களே தமது இடங்களில் தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டால் அதைப் பற்றி தமக்குள்ளேயே பேசிக் கொண்டிருக்காமல் தமது பிரச்சினையை எழுத்துமூலம் யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)




## கேபிள் முகவரின் வாகனங்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(கரவெட்டி)

ஆனைக்கோட்டைப் பகுதி தனியார் தொலைக்காட்சிகளின் கேபிள் முகவர் ஒருவரின் வாகனங்கள் கரவெட்டிப் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் கடுமையாக தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணிக்கு கரவெட்டி கிழக்குப் பகுதியில் உள்ள அவரது உறவினர் வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் அவரது உறவினர் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்ட கார், பிக்கப் வாகனங்களின் கண்ணாடிகளையும் மற்றும் வீட்டுக்கண்ணாடிகளையும் தலைக்கவசம் அணிந்து வந்த நபர்கள் இரும்புக் கம்பி களால் அடித்து நொறுக்கிவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தனியார் தொலைக்காட்சி கேபிள் நிறுவனங்களின் முகவர்களுக்கு ஏற்பட்ட தகராறு காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது. ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பாலசுந்தரம் அலஸ்குமார் என்பவரின் வாகனமே இவ்வாறு இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை கடந்த தை மாதம் 8 ஆம் திகதி இரவு 4 பேர் கொண்ட இனந்தெரியாத நபர்கள் கைத்துப்பாக்கியைக்காட்டி அச்சுறுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

வாகனங்கள் சேதமாக்கப்பட்ட இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

## 7 வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக நாளை சட்ட நடவடிக்கை

(கரவெட்டி)

பருத்தித்துறை சுகாதார வைத்தியசாலைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 18 வெதுப்பகங்களில் சுகாதார பரிசோதக அதிகாரிகளினால் திடீர் சோதனை நடத்தப்பட்டது.

கடந்த மே மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகளில் சுகாதார சீர்கேட்டுடன் வெதுப்பகங்களை வைத்திருந்த 7 வெதுப்பங்களுக்கு எதிராக வழக்கு பதியப்பட்டுள்ளது.

சம்பவ தினம் இரவு 9 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது சுகாதார சீர்கேடான வகையில் வெதுப்பகங்களை வைத்திருந்தமை மற்றும் சீர்கேட்டுடன் பண்டங்களை தயாரித்தமை, உணவுப் பண்டங்களை வெளியே வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களில் வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இவர்கள் அனைவரும் நாளை வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜராகவுள்ளனர். (அ-3-24)

## ஆலோசனைக்கூட்டம் பிற்போடப்பட்டது

நல்லூர் வரலாற்றுக் கழகம் அமைப்பது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு பிற்போட்டப்பட்டுள்ளது என யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறித்துள்ளார்.

இந்தக் கழகம் அமைப்பது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-6)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வியாழக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய், மருதனார்மட பிரதேசத்தின் ஒருபகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## உரிமைகோரப்படாத சடலம் நாளை அடக்கம் செய்யப்படும்

(கரவெட்டி)


பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடந்த 24 ஆம் திகதி காய்ச்சல் காரணமாக நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்ட வரணி இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நல்லையா (வயது-80) என்ற வயோதிபர் மறுநாள் மரணமானார். குறித்த வயோதிபரின் சடலத்தை பொறுப்பேற்குமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊடகங்கள் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும் இதுவரை உறவினர்களால் சடலம் பொறுப்பேற்கப்படவில்லை. இதனால் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஊடாக நாளை வியாழக்கிழமை அல்வாய் கருகம்பன் இந்து மயானத்தில் அரச செலவில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளதாக பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையின் பதில் நிர்வாக உத்தியோகத்தர் சிவசம்பு விஜயரங்கன் தெரிவித்துள்ளார்.

குறித்த வயோதிபரின் சடலம் 14 நாட்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3-24)







சுப்பிரமணியம் புத்திசிகாமணியின் சுவடிகள் நூல் வெளியீட்டு விழா அண்மையில் சாவகச்சேரி நகராட்சி மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நகர பிதா இ. தேவசகாயம்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதையும் முதற்பிரதியை நகர பிதா வெளியிட்டு வைக்க அகில இலங்கை இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் பெற்றுக்கொள்வதையும் சாவகச்சேரி நகரசபை பிரதம நூலகர் சு. வித்தியானந்தன் எழுத்தாளரை மாலை அணிவித்துக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# இந்திய எரிபொருள் நிறுவனத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் எமக்கில்லை

## அரசாங்கம் கைவிரிப்பு

இந்திய எண்ணெய் நிறுவனமான ஐஓசி நிறுவனம் மேற்கொள்ளும் எரிபொருள் விலையுயர்வுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் தமக்கு இல்லை என்று இலங்கை பெற்றோலியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் டீசலின் விலையை 2 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என்று தீர்மானத்தை ஐஓசியின் நிர்வாகமே மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் கேள்வி ஒன்றுக்கே அமைச்சு இந்த பதிலை வழங்கியுள்ளது.

இந்திய நிறுவனம் டீசலின் விலையை உயர்த்தியது தொடர்பில் இலங்கை அரசாங்கம் வெட்கப்பட வேண்டும் என்று ஜயலத் ஜயவர்த்தன குறிப்பிட்டிருந்தார்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி ஐஓசி எரிபொருளின் விலையை சுயாதீனமாக அதிகரிக்கலாம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# போரின் பின்னர் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது–கோத்தபாய

போரின் பின்னர் நாட்டில் மத மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மதம் தொடர்பான அக்கறை அதிகரித்துள்ளது. இளைஞர், யுவதிகளை நல்வழிப் படுத்த மதம் தொடர்பான விழிப்புணர்வு அவசியமானது.

நாடு, சமூகம், மக்கள் தொடர்பில் வெளிநாட்டு சக்திகள் பிழையான ஓர் பிரசாரத்தை செய்ய முயற்சிக்கின்றனர். எனினும் இளைஞர், யுவதிகளில் பலர் தியான வகுப்புக்களில் கலந்து கொள்கின்றனர். இவ்வாறு சமூகத்தில் பாரிய எவு மாற்றம் ஏற்பட்டுள்ளது என கோத்தபாய தெரிவித்துள்ளார். (அ-2)

# சிறைச்சாலைகளில் திடீர் சோதனை; கையடக்கத் தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

அநுராதபுரம் மற்றும் கொழும்பு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் சிறைச்சாலைகளை வீடியோ எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் மற்றும் கொழும்பு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 44 கையடக்க தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் சில செய்மதி தொழில்நுட்பம் மற்றும் வீடியோ பதிவு செய்யக்கூடிய வசதிகளை கொண்டவை. புலிச்சந்தேக நபர்கள் சிறைச்சாலைகளை வீடியோ பதிவு செய்து வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க முயற்சித்துள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனையின் போது இந்த கையடக்க தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன. கைதிகள் நடத்தும் உண்ணா நிலைப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் இவ்வாறு வீடியோ காட்சி எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புலிச்சந்தேக நபர்களுக்கு சிறைச்சாலை அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. சிறைச்சாலை அதிகாரிகள் புலிச்சந்தேக நபர்களினால் எடுக்கப்பட்ட வீடியோ காட்சி அடங்கிய சிம் அட்டைகளை சில நபர்களுக்கு விநியோகம் செய்துள்ளனர் என அறியவருகின்றது. (அ-2)

# நகை திருடிய இலங்கையர் நால்வருக்கு சிறைத்தண்டனை

## சிங்கப்பூரில் சம்பவம்

சிங்கப்பூரில் உள்ள லிட்டில் இந்தியா என்ற வர்த்தக நிலையத்தில் 7 தங்கச்சங்கிலிகளை களவாடியதாக குற்றஞ்சாட்டப்பட்டு நான்கு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி குறித்த வர்த்தக நிலையத்தின் 58 வயதுடைய விற்பனை பிரதிநிதி ஒருவர் 7 தங்கச் சங்கிலிகளை விற்பனைக்காக காண்பித்து கொண்டிருந்த வேளையில் திடீரென அவை களவாடப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையத்தில் அதிக சன நடமாட்டம் இருந்ததால் கள்வர்களை அப்போது பிடிக்க முடியவில்லை. இந்நிலையில் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய முதலாவது சந்தேக நபர் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய மூன்று சந்தேக நபர்களும் சிங்கப்பூரை விட்டுச் செல்லும் வழியில் கடந்த 2 ஆம் திகதி சங்கி (Changi) விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து களவாடப்பட்ட நான்கு தங்கச் சங்கிலிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. களவாடப்பட்ட தங்கச் சங்கிலிகள் 53 ஆயிரம் சிங்கப்பூர் டொலர் பெறுமதியானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 2012.06 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1508-புனித ரோமப் பேரரசன் முதலாம் மாக்சிமிலியன் பிரியுல்லா என்ற இடத்தில் வெனிசியப் படைகளிடம் தோற்றான்.

★ 1644-கின் அரசமரபின் மஞ்சு படைகள் பீஜிங் நகரைக் கைப்பற்றின.

★ 1711-யாழ்ப்பாணத்தில் இந்து மதச் சடங்குகளுக்கு ஒல்லாந்து அரசினால் தடை விதிக்கப்பட்டது.

★ 1752-மொஸ்கோவின் மூன்றில் ஒரு பங்கு தீயினால் அழிந்தது. 18 ஆயிரம் வீடுகள் சேதமடைந்தன.

★ 1761-சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வீனஸ் கோளின் நகர்வு பூமியின் பல இடங்களிலும் அவதானிக்கப்பட்டது.

★ 1808-நெப்போலியனின் சகோதரன் ஜோசப் பொனபார்ட் ஸ்பெயின் மன்னன் ஆனான்.

★ 1832-பாரிசில் மாணவர் எழுச்சி முறியடிக்கப்பட்டது.

★ 1844- கிறிஸ்தவ இளையோர் அமைப்பு (YMCA) லண்டனில் அமைக்கப்பட்டது.

★ 1859-குயின்ஸ்லாந்து என்ற பெயரில் புதிய குடியேற்ற நாடு நியூசவுத் வேல்ஸ் இலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

★ 1862-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் டென்னசியில் மெம்ஃபிஸ் நகரை கூட்டமைப்புப் படைகளிடம் இருந்து கைப்பற்றின.

★ 1882-அரபிக் கடலில் இடம்பெற்ற புயலால் மும்பையில் ஒரு இலட்சம் பேர்களுக்கு மேல் உயிரிழந்தனர்.

★ 1912-அலாஸ்காவில் நொவரப்டா எரிமலை வெடித்தது.

★ 1930-இலங்கையில் வீரகேசரி நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: நோமண்டி சண்டை ஆரம்பமானது.

★ 1971-சோயுஸ் 11 ஏவப்பட்டது.

★ 1974-சுவீடனில் நாடாளுமன்ற முடியாட்சி அமைக்கப்பட்டது.

★ 1981-இந்தியாவில் தொடருந்து ஒன்று பகுமதி ஆற்றில் தடம்புரண்டு வீழ்ந்ததில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

★ 1984-இந்திய இராணுவத்தினர் அம்ரித்சரில் உள்ள பொற்கோயிலில் தாக்குதல் நடத்தியதில் 576 பேர் உயிரிழந்து 335 பேர் காயமுற்றனர்.

★ 1993-மங்கோலியாவில் முதலாவது நேரடியான ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

★ 2004-இந்தியாவில் தமிழ்மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1799-அலெக்சாண்டர் புஷ்கின், ரஷ்ய எழுத்தாளர், கவிஞர் (இ.1837)

★ 1893-கருமுத்து தியர்கராஜன் செட்டியார், இந்திய விடுதலை இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர் (இ.1974)

★ 1901-சுகர்னோ, இந்தோனேசியாவின் முதல் ஜனாதிபதி (இ.1970)

★ 1930-சுனில்தத், இந்தியத் திரைப் பட நடிகர் (இ.2005)

★ 1948-சுப்ரமணிய ராஜு, தமிழ் எழுத்தாளர் (இ.1987)

★ 1986-பாவனா, தமிழ், மலையாளத் திரைப்பட நடிகை

### இறப்புக்கள்

★ 1947-மு.சி. பூரணலிங்கம் பிள்ளை, தமிழறிஞர் (பி.1866)

★ 1968-ரொபேர்ட் எஃப் கென்னடி, அமெரிக்க செனட்டர் (பி. 1925)

★ 1996-ஜோர்ஜ் ஸ்நெல், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1903)

★ 2008-ஜோர்ஜ் சந்திரசேகரன், இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் (பி.1940)

★ 2009-ராஜமார்த்தாண்டன், கவிஞர், எழுத்தாளர்

### சிறப்பு நாட்கள்

★ சுவீடன் தேசிய தினம்

★ தென்கொரியா- நினைவு தினம்

★ குயின்ஸ்லாந்து தினம்



★ 2007-இலங்கையின் அறிவியலாளர் வீ. கே.சமரநாயக்கவின் நினைவு தினம் (பி. 1939)

# சயன சுகம் யாருக்கு?

ஒருவர் ஜாதகப்படி சுகஸ்தானமான நான்காமிடத்தைக் கொண்டு அவர் அனுபவிக்கும் சுகம் எத்தகையது என்று ஜோதிடர்கள் தீர்மானிக்கமுடியும்.

லக்னத்துக்கு நான்காமிடத்தில் சுபக் கிரகங்களான குரு,சுக்கிரன்,வளர்பிறைச்சந்திரன் (கேந்திராதிபத்திய தோஷமில்லாத) பாபியோடு சேராத புதன் முதலியவர்களின் ஒருவரோ அல்லது இருவரோ இருந்தால் ஜாதகர் சுகானுபவன் தான் என்று தீர்மானித்து விடலாம்.

சுகஸ்தானமான நான்காமிடத்தை மேலே குறிப்பிட்ட கிரகங்கள் பார்வையிட்டாலும் ஜாதகர் ஓரளவிற்குச் சுகானுப்பவனேயாகும். சுப,பாபக்கிரகங்கள் சேர்ந்து காணப்பட்டாலோ அல்லது பார்த்தாலோ பாதியளவிற்கு ஜாதகர் சுகானுபவனேயாகும்.

இந்தப்பாதியளவு சுகம் என்பதை நாம் எப்படி தீர்மானிக்க வேண்டும் என்பதில்தான் பிரச்சினையே ஆரம்பமாகின்றது.பங்களா, கார், ஆளடிமை போன்ற பல வசதிகள் பெற்ற ஜாதகர்களும் சில சமயம் சுகமனுபவிக்க முடிவதில்லை. சரியானபடி வீட்டில் தங்க முடியாத சூழல் பல உருவாகி ஜர்தகர் வேறிடத்தில்




இருக்க நேரிடும் போது தன் சுகத்தை இழக்க வேண்டியவராகிறார்.சில்ர் இருக்கும் சுகத்திலேயே திருப்தி ஏற்படாது மேன் மேலும் பல சுகத்துக்கு ஏங்கித்தவிப்பதால் இவர் பாதி சுகத்தை அனுபவிப்பவர் தாம். சிலர் தங்கள் ஆயுள் காலத்தில் பாதியளவு வரை சகல சுகத்தையும் அனுபவித்து தீர்த்து விட்டிருப்பார்கள். மீதியுள்ள ஆயுட் காலத்தில் என்னதான் சுபக் கிரகத்தில் தெசா புத்திக் காலம் நடந்தாலும் இவர்கள் எதிர்பார்க்கும் சுகப் பலன் ஏற்படுவதில்லை.

சிலர் தங்கள் மத்திமகாலம் வரையில் ஒரு சுகத்தையும் காணாது வாடி வதங்கி இருந்தாலும் அந்திம காலத்திலாவது பல வசதிகள் பெற்று சுகமனுபவிப்பவர்களாகிறார்கள். ஒருவர் தன் விதிப்படி இது போன்ற அர்த்த யோக பலன் பெற்றிருந்தால் ஜாதகத்தில் சுகஸ்தானத்தில் நிற்கும் கிரகமும் தன் காலங்களில் தென்றல் வீசுவதைப் போன்ற சுகப் பலன்களை இலேசாக வீசி திடீர் திடீரென்று மறைந்து விடுவதும் உண்டு. நல்லது.

**பொதுவாக சுகம் என்றால் என்ன?**

இது ஒரு நல்ல கேள்விதான். ஒருவேலையும் செய்யாது நன்றாக சாப்பிட்டு,பொழுது போக அரட்டையடித்து இரவானதும் குறட்டை விடும் நபர்களும் ஒருவித யோகமுள்ளவர்கள் தாம். இவர்களை ஏன் சுகானுபவன் என்று சொல்லக்கூடாது? மற்றும் பெற்றோர்களால் சுகமடையும் பிள்ளைகள், பிள்ளைகளால் சுகமடையும் பெற்றோர்கள், கணவனால் சுகம் பெறும் மனைவி,மனைவியால் சுகம் பெறும் கணவன் இப்படி யாருக்கு யாரால் சுகம் என்பதை அந்த பாவத்தில் இருக்கும் ஆதிபத்தியகாரக கிரகத்தின் குணங்களைக் கண்டறிந்து பார்க்கப்படும் கிரகத்தின் தன்மைக் கேற்ப ஜோதிடர்கள் பலனேற்படுத்துவார்கள்.

இதுவன்றி சாதாரணமாக இருந்து வந்தவர்கள் கூட தாங்கள் கற்ற கல்வியின் சிறப்பை வெளிப்படுத்தி அதனால் முன்னுக்கு வந்து பலவித சௌகரியத்தையும் அனுபவிக்கும் சுகானுபவர்கள், தாங்கள் கற்ற கல்வியால் சுகமனுபவிப்பதாகச் சொல்ல வேண்டும்.

இப்படி, முதலாளியால் தொழிலாளியும், தொழிலாளியால் முதலாளியும் சுகம் பெறுவதுண்டு.ஆகவே சுகம் என்பதை மையப்படுத்தி யாரால் எப்போது,எந்தத் திசையில் சுகப் பலனேற்படும் என்னும் விபரத்தை நன்கு ஆராய்ந்து சொல்ல வேண்டும் ஜோதிட பண்டிதர். இதுவரையில் நான் சொன்னது சாதாரண சுகத்தை பற்றியதாகும்.

ஜாதக பலனில் சயன சுகம் என்றொரு பகுதி உண்டு. அதாவது லக்னத்துக்கு பன்னிரெண்டாமிடத்தைக் கொண்டு ஜாதகரின் சயன சுகத்தைப் பற்றிக் கூறலாம். லக்னத்துக்கு பன்னிரெண்டாமிடத்தை விரய ஸ்தான மென்றும் மோட்ச ஸ்தானமென்றும் கூறலாம்.

ஞான மோட்சகாரகன் என்று ஜோதிடர்களால் போற்றப்படும் கேது பன்னிரெண்டாமிடத்தில் நின்றால் ஜாதகர் மோட்சத்துக்கு செல்வார் என்றும் மறுபிறவி இல்லையென்றும் சில ஜோதிடர்கள் கூறுவதுண்டு.

ஒரு ஜாதக ருக்கு பன்னிரெண்டாமிடத்தில் கேது வீற்றிருந்த நபர் ஒருவர் எனக்கு ஒரு கடிதம் எழுதி தனக்கு மோட்சம் சித்திக்குமாவென்றும் மறுபிறவி உண்டாவென்றும் கேட்டிருந்தார். நான் பதிலேதும் எழுதவில்லை. காரணம்,

மனிதர்களுக்கு முக்கிய பல பிரச்சினைகள் தலைதூக்கி நிற்கும் இக்காலத்தில் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவே ஜோதிடம் அமைதல் வேண்டுமே அல்லாது தேவையில்லாத மோட்ச, மறுபிறவியை பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? நம் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையிலேயே எத்தனையோ கவலைகள் இருந்து வருகின்றனவே.

ஜோதிடர் வாழ்க்கையின் முக்கிய அம்சங்களுக்கு வழி காட்டியாய் மக்களை ஊக்குவித்து வரவேண்டும். அவர்களுக்கு இன்ன நேரத்தில் அப்படி நடந்து கொண்டால் இன்ன சிக்கல் ஏற்படாது என்று ஜாதகரின் கிரக நிலவரத்தால் கண்டறிந்து சொல்வதே சிறந்ததாகும்.

இப்படிச் செய்யும் போதும் 100 க்கு 50 சதமே பலன்கள் பெரிய ஜோதிடருக்கும் பலித்து வருவதை நாம் மறுக்க முடியாது.இப்படி நாம் பிரத்தியட்சமாக கண்கூடாகப் பார்க்கும் பலன்களை விடுத்து யாருமே கண்டறிய முடியாத ஒரு பலனைச் சொல்லி ஜாதகரை ஏன் குழப்ப வேண்டும்?

மோட்சத்துக்குப் போனவன் திரும்பி வந்து நான் மோட்சத்துக்குத் தான் போனேன். இனி எனக்கு மறுபிறவி இல்லை என்று சொன்னால் தானே பன்னிரெண்டில் நின்ற கேது கண்டிப்பாக மோட்சத்தைக்கொடுத்து மறுபிறவி இல்லாதபடி செய்வான் என்று ஜோதிடர் துணிந்து கூறலாம்.

ஆனால் ஏனைய கிரகங்களின் பலன் அப்படியல்ல. என்னய்யா நாலில் சுக்ரன் நின்றால் மாளவ யோகம்னு பாட்டாய் விளக்கித் தள்ளிவிட்டீரே? ஒன்றையும் காணோமே! என்று கூறலாம் ஜாதகர். இதனால் ஜோதிடரும் என்ன காரணம் என்று பின்னால் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படுகின்றதல்லவா? எனவே மோட்சம் மறுபிறவி என்று கண்டறிய அவசியமே இல்லை. மதுராவில் பிறந்த சாந்தியை வைத்து மறுபிறவி உண்டு என்று தீர்மானிக்கலாம். ஆனால் மறுபிறவி இல்லை என்பதற்கு யாரைக் காட்டித் தீர்மானிக்க முடியும்?

ஆகவே நண்பர்களே! பன்னிரெண்டில் வீற்றிருக்கும் கேதுவால் வாழ்க்கைக்கு நடைமுறையில் உதவக்கூடிய பலனைக் கண்டறிய முயலுங்கள். முற்கால ஜோதிட நூல்கள் இதை வலியுறுத்தினாலும் இன்று வாழும் மனிதர்களுக்கு அது தெரிந்து கொண்டு ஆகப் போவது ஒன்றுமில்லை.

பன்னிரெண்டாமிடமான சயன சுகஸ்தானத்தில் பாபக்கிரகமான கேது இருந்தால் சயனசுகம் குறைவு. தூக்கமின்மை, அவசியமற்ற செலவு, வரவுக்கு மேல் செலவு ஒரு கண்பார்வைக்குறைவு என்று சொல்லலாம்.

ஞானி என்னும் பட்டப்பெயரை தாங்கி பன்னிரெண்டாமிடத்தில் கேது நின்றால் ஒருகால் ஜாதகரின் அரைத் தூக்கத்திலும் சில உண்மைகள் புலப்படலாம். அதாவது தீர்க்க தரிசனம் போன்ற ஒரு சக்தி ஜாதகருக்கு ஏற்படலாம் என்பதோடு நிறுத்திக் கொள்ளலாம்.

ஆனால் இதுவரை வெளிவந்துள்ள ஜோதிட நூல்களின் கருத்து தவறா அல்லது இதை எடுத்துக் கூறிக் கொண்டு வந்த ஜோதிடர் தவறாவென்று நாம் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. இன்றுள்ள உலக மக்களுக்கு அந்த மோட்ச, மறுபிறவி இல்லை என்கிற சந்தேகத்துக்கு இடமுள்ள பலன் தேவையில்லை என்பது என் கருத்து.

**அடுத்து சயன சுகம் யாருக்கு ஏற்படுகின்றது? என்று பார்க்க வேண்டும்.**

கட்டாந்தரையில் துண்டால் தட்டிப் படுத்துக் கவலையற்று உறங்கும் தொழிலாளி மக்கள் பலர் இருக்க, உண்டு கொழுத்து உப்பரிகையில் ஒய்யார நடைபோட்டு பலவித வாசனாதித்திரவங்கள் நாசியத் துளைக்க மலர் மஞ்சத்தில் படுத்துக் கொண்டாலும் நித்திரையில்லாது மாத்திரைகள் விழுங்கும் நிலை எப்படி வருகின்றது.?

அதுதான் ஜாதகத்தில் லக்னத்துக்கு பன்னிரெண்டாமிடத்தில் வீற்றிருக்கும் பாபக்கோள்கள் செய்யும் வேலை. இதே இடத்தில் சுபக் கோள்களான குரு, சுக்ரன், வளர் பிறைச்சந்திரன் (கேந்திராதிபத்திய தோஷமில்லாது) பாபியோடு சேராத புதன் முதலியவர்களில் ஒருவரோ அல்லது இருவரோ நின்றிருந்தால் ஜாதகருக்கு சயன சுகமும் ஆழ்ந்த நித்திரையும் உண்டு.

மற்றும் சயன சுகம் என்றாலே கட்டில் இலவம் பஞ்சடைத்த மெத்தை, தலையணை, கொசுவலை முதலியவைகளை கொண்டவைதான். இதனுடன் மங்கிய நீலநிறம் பெட்ரூம் லைட், இலேசான காற்றில் மல்லிகையின் நறுமணம், முதலியவை நித்திரையை உடனே தழுவ வைக்கும் சாதனம், சயன சுகம் இப்படி?

நாமும் தூங்குகிறோமென்றால் சயன சுகத்தால் தூங்கும் தூக்கமல்ல, களைப்பால் தூங்கும் தூக்கம்.

# சுதந்திர ஊடக இயக்கத்தில் 40 மில்லியன் ரூபாய்கள் மோசடி

## சண்டேலீடர் தகவல்


Free Media Movement என்ற சுதந்திர ஊடக இயக்கத்தில் சுமார் 40 மில்லியன் ரூபாய்கள் மோசடி இடம்பெற்றுள்ளதாக இலங்கையின் சண்டேலீடர் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பத்திரிகையாளர்களைக் காக்கும் அமைப்பாகச் செயற்படும் இந்த அமைப்பின் முன்னாள் அழைப்பாளராக இருந்த சுனந்த தேசப்பிரியவின் காலத்திலேயே இந்த மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த அமைப்பு ஊடகவியலாளர்களின் கருத்தை வெளிப்படுத்தும் அமைப்பாகச் செயற்பட்டு வந்தது. இந்தநிலையில் அமைப்பு தமது உறுப்பினர்களிடம் இருந்து ரூபா 100 அங்கத்துவப் பணத்தையும் பெற்றுவந்தது.

எனினும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் இந்த அமைப்பு வெளிநாட்டு அமைப்புக்களிடம் இருந்து பாரிய நிதியைப்பெற்று பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. இதன்போதே இந்தமோசடி இடம்பெற்றுள்ளதாக சண்டேலீடர் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற சுதந்திர ஊடக அமைப்பின் பொதுக்கூட்டத்தில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் இடம்பெற்ற குறித்த 40 மில்லியன் ரூபாய்கள் காணாமல்போன விடயம் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எதனையும் எடுக்கத்தேவையில்லை என்று தீர்மானிக்கப்பட்டதாக அச் செய்தித்தாள் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)



யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள நீராவியடி பிள்ளையார் ஆலய முத்துச் சப்பற திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது பிள்ளையார் முத்துச் சப்பறத்தில் வீதியுலா வருவதனைப் படத்தில் காணலாம். (படம்:- உ. சாளீன்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 149



பிரான்சின் எதிர்ப்பியக்க உறுப்பினர்கள் கனேடிய இராணுவத்துடன் இணைந்திருக்கின்றனர்


...சோவியத் இராணுவ பால்கனில் விரைவாக முன்னேறியதால் தோன்றிய அனுகூலமான நிலவரத்தைப் பயன்படுத்திக்கொண்ட கிரேக்க தேசபக்தர்கள் 1944 அக்டோபர் இறுதியில் கிரீஸ் நாட்டின் நிலப்பரப்பை பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து விடுவிப்பதில் வெற்றி கண்டனர். இதன் மூலம் பாசிசத்தை முறியடிக்கும் பொது இலட்சியத்திற்கு தம்பங்கை ஆற்றினர்.

மற்ற நாடுகளிலும் உள்நாட்டுப் போர்முனை நிலவியது. ஆசியாவிலும் எதிர்ப்பு இயக்கம் பெரிதும் வளர்ச்சியடைந்தது. உதாரணமாக 1944 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 8-வது மற்றும் புதிய 4-வது சீனப் படைகள் சீனாவிலிருந்த ஜப்பானிய மற்றும் கோமிண்டான் துருப்புகளின் கணிசமான சக்திகளைக் கட்டிப் போட்டன. வியட்நாமில் 1944 ஆம் ஆண்டு ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக முன்னணி தோற்றுவிக்கப்பட்டது. இது வெளியிட்ட அரசியல் வேலைத்திட்டத்தில், இராணுவ வெறிகொண்ட ஜப்பானின் மீது வெற்றி அடையப்பட்டதும் இது வியட்நாமின் சுதந்திரத்தைப் பிரகடன்ப்படுத்தும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

1944 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இந்தோனேசியாவில் சுதந்திர இந்தோனேசிய இயக்கம் என்ற தலை மறைவு ஸ்தாபன தோற்றுவிக்கப் பட்டது. பர்மாவில் பொது தேசிய ஏகாத்பத்திய எதிர்ப்பு முன்னணி உருவாகி வந்தது. பிலிப்பைன் தீவுகளில் எதிர்ப்புச் சக்திகள் தீவிரமாக இயங்கின. உதாரணமாக 1944 ஆம் ஆண்டு ஹுக்பலாஹா மக்கள் இராணுவம் குடிமக்களின் திவீர பங்கேற்போடுகூட லுசோன் தீவின் பல பிரதேசங்களை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்தது, இங்கே ஜனநாயக மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால், இவற்றை உறுதிப்படுத்த இயலவில்லை. அமெரிக்கத் துருப்புகள் தீவில் இறங்கிய பின் மாக்கார்தூர் படைத் தலைமையகம் மேற்கொண்ட முதல் நடவடிக்கை, எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர்களைக் கைது செய்ததாகும்.

சோவியத் யூனியன் செய்ததைப் போல் அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்களும் இவற்றின் படைத் தலைமையும் எதிர்ப்பு இயக்கத்திற்குத் தேவையான ஆதரவு அளித்திருந்தால் இந்த இயக்கம் மிகப்பெரும் பயன்களை அளித்திருக்கக் கூடும்.

பொது மக்களின் போராட்டம் விரிவடையக் கூடும் என்றும் இந் நாடுகளில் ஆழ்ந்த சமூக ஜனநாயக மாற்றங்கள் ஏற்படக் கூடும் என்று அஞ்சிய அமெரிக்க ஐக்கிய நாடும் பிரிட்டனும் எதிர்ப்பு இயக்கத்தை முடிந்த வழிகளில் எல்லாம் கட்டுப்படுத்தின, வலதுசாரி அரசியல் குழுக்களின் தலைமையின் கீழிருந்த பிரிவினருக்குப் பெரிதும் உதவி செய்தன.



பிரான்சில் எதிர்ப்பியக்க வீரர்களின் தியாகத்தை நினைவுகூரும் ஆலயம்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

அதே நேரத்தில் சோவியத் யூனியனோ, தமது தேசிய மற்றும் சமூக விடுதலைக்காக போராடிய மக்களின் அபிலாஷைகளை எப்பொழுதும் பூர்த்திசெய்ய முயன்றது, இயன்றவரை அவர்களுக்கு உதவி செய்யப் பாடுபட்டது. 1944 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் சோவியத் யூனியனின் பரப்பில் 1-வது செக்கோஸ் லொவாக்கிய சோவியத் யூனியனின் பரப்பில் 1-வது போலந்து படை மற்றும் யுகோஸ்லாவிய காலாட்படை பிரிகேடு ஆகியவை தோற்றுவிக்கப்பட்டதிலும், போலந்து, செக்கோஸ்லொவாக்கியா, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் கெரில்லாப் இயக்கத்தின் வளர்ச்சிக்காக தொண்டர்கள், ஆயுதங்கள், போர்த் தளவாடங்கள் மற்ற இராணுவப் பொருட்களை வழங்கி நடைமுறை ரீதியாகப் பெரும் உதவி செய்ததிலும் இது திட்டவட்டமாக வெளிப்பட்டது. சோவியத் யூனியனின் பரப்பில் இயங்கிய 7 கெரில்லாப்படை யூனிட்டுகளும் 26 கெரில்லாப் படை அணிகளும் 1944 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் போலந்திற்கு அனுப்பப் பட்டன.

பல ஐரோப்பிய நாடுகளில், பாசிச கொடுஞ்சிறை முகாம்களிலிருந்து தப்பிய சோவியத் மக்களும் எதிர்ப்பு இயுக்கத்தில் கலந்து கொண்டு போரிட்டனர். பல சோவியத் தேசபக்தர்கள் பாசிச எதிர்ப்புக்குழுக்களின் தலைவர்களாகவும் கெரில்லாப்படை அணிகளின் கமாண்டர்களாகவும் இருந்தனர்.

ஐரோப்பிய நாடுகளில் கெரில்லா இயக்கத்திற்கு சோவியத் யூனியன் அளித்த உதவி பெரும் இராணுவ, தார்மீக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சோவியத் துருப்புகளின் வெற்றிகளோடு சேர்ந்து இது பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் இலட்சோப இலட்சம் மக்களுக்கு உற்சாகமூட்டியது. அவர்களிடம் சக்தியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

எதிர்ப்பு இயக்கம் இழப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. போர்க்களங்களிலும் பாசிச சிறைகளிலும் நூறாயிரக்கணக்கான தேசபக்தர்கள் மாண்டனர். பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தின் முன்னணிப் படையாக இருந்த கம்யூனிஸ்டுகளுக்குக் குறிப்பாக பேரிழப்பு ஏற்பட்டது.

எதிர்ப்பு இயக்கம் பெரும் அரசியல், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இது பாசிசத்தை முறியடிப்பதில் கணிசமான பங்காற்றியதோடுகூட யுத்தத்திற்குப் பிந்தைய உலக வளர்ச்சி மீதும் கணிசமான தாக்கத்தைச் செலுத்தியது. எதிர்ப்பு இயக்கம், கெரில்லாப் படைவீரர்கள், ஆயுத எழுச்சியில் பங்கேற்றவர்கள் ஆகியோர் பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் ஆற்றிய முக்கிய பங்கைக் குறிப்பிட்ட லி.இ.பிரேஷ்னெவ், கடந்த யுத்தத்தில் சோவியத் மக்கள் அடைந்த மகத்தான வெற்றியின் 30-வது ஆண்டு நிறைவையொட்டி ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறினார்.

“கம்யூனிஸ்டுகளால் தலைமை தாங்கி நடத்தப்பட்ட யுக்கோஸ்லாவிய மக்கள் விடுதலை இராணுவத்தின் வீரஞ்செறிந்த போராட்டம், போலந்து, செக்கோஸ்லொவாக்கிய தேசபக்த வீரர்களால் உருவாக்கப்பட்ட படைகள், யூனிட்டுகளின் வீரச் செயல்கள் ஸ்லொவாக்கியா, ருமேனியா, பல்கேரியாவில் நடைபெற்ற மக்கள் எழுச்சிகள், அல்பேனிய் மக்களின் விடுதலைப் போராட்டம் எதிர்ப்பு இயக்கம், பிரான்ஸ், இத்தாலி, மற்ற நாடுகளில் கெரில்லாப்படை அணிகளின் நடவடிக்கைகள், எதிரியின் நாட்டினுள்ளே நடைபெற்ற பாசிச எதிர்ப்புத் தலைமறைவுக் குழுக்களின் போராட்டம் இவையனைத்தும் இறுதியில் சோவியத் மக்களின் போராட்டத்தோடு ஒன்றிணைந்து ஐரோப்பாவிலிருந்து பாசிசத்தைக் கழுவித் தள்ளிய ஒரு மகத்தான பெருக்காக மாறின.”



பிரான்சில் -எதிர்ப்பியக்க வீரர்கள் உணவு விடுதியொன்றில்

(தொடரும்)

# மஹிந்தவை லண்டனிலிருந்து விரட்டியடியுங்கள்

## திருமாவளவன் அறிக்கை



**இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ்ச்சொந்தங்கள் யாவரும் ஒரே களத்தில் ஒரே வேகத்தில் போராடி இக்கொலைக்குற்றவாளி ராஜபக்ஷவை விரட்டியடிக்க வேண்டுமென தொல்.திருமாவளவன் வேண்டுகோள் விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு,

இங்கிலாந்து நாட்டின் மகாராணி இரண்டாம் எலிசபெத் அம்மையார் அரச பொறுப்பேற்று 60 ஆண்டுகள் நிறைவுற்றதையொட்டி 'வைரவிழாவாக கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் அரசு நிறுவனங்கள் அனைத்திற்கும் பொது விடுமுறை விடப்பட்டுள்ளது.

உலகின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நடைபெற்றுவரும் இந்த வைர விழா நிகழ்வில் உலக நாடுகளின் தலைவர்கள், தொழிலதிபர்கள், அரச தூதுவர்கள் என ஏராளமானோர் பங்கேற்கின்றனர்.

போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பங்கேற்கவுள்ளதால் உலகத் தமிழர்களிடையே பெரும் கெதந்தளிப்பு உருவாகியுள்ளது.

ஏற்கனவே இங்கிலாந்துக்குச் சென்றிருந்த ராஜபக்ஷவை அம்மண்ணில் வாழ்ந்து வரும் புலம்பெயர் தமிழ்ச்சமூகம் கடுமையான போராட்டங்களை முன்னெடுத்து குறிப்பிட்ட நிகழ்வில் பங்கேற்கவிடாமல் விரட்டியடித்தது.

இந்நிலையில் மீண்டும் ராஜபக்ஷ இங்கிலாந்து நாட்டுக்கு அரசின் விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கின்றார் என்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இனப்படுகொலைக் குற்றவாளி ராஜபக்ஷவை இங்கிலாந்து மண்ணில் அனுமதிக்கக்கூடாது எனப் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் ஒருங்கிணைந்து கடந்த சில நாட்களாக தமது கடுமையான எதிர்ப்புக்களை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தி வருவது ஆறுதலை அளிக்கின்றது.

அதேவேளையில் புலம் பெயர்ந்த தமிழர்களின் ஒற்றுமையும் உறுதிமிக்க செயற்பாடுகளும் இன்றியமையாத தேவைகளாக உள்ளன.

எனவே இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சொந்தங்கள் யாவரும் அமைப்பு மற்றும் இயக்கங்களின் வரம்புகளைத் தாண்டி கருத்து மாறுபாடுகளைப் புறந்தள்ளி ஒரே களத்தில் ஒரே வேகத்தில் போராடி இனக் கொலைக் குற்றவாளி ராஜபக்ஷவை இங்கிலாந்து மண்ணிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என தொல்.திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)

# மதத்தலைவர்கள் சட்டமூலம் ஐ.தே.க.நிலைப்பாடு என்ன?

(கொழும்பு)

பிக்குகள் உள்ளிட்ட மதத் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடுவதை தடுக்கும் வகையில் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ கொண்டு வந்துள்ள தனிநபர் சட்ட மூலம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தமது நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ குறித்த சட்ட மூலத்தை கடந்த மே மாதம் 31 ஆம் ஆம் திகதி பாராளுமன்றில் முன்வைத்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவர் சட்ட மூலத்தை முன்வைக்க ஐக்கிய தேசியக் கட்சி தலைமை மற்றும் செயற்குழுவின் அனுமதியைப் பெற்றாரா? என தெளிபுபடுத்தப்பட வேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூரண பேச்சுவார்த்தை, வாதப் பிரதிவாதம் அல்லது இணக்கப்பாடு இன்றி இவ்வாறானதொரு சட்ட மூலம் முன்வைக்கப்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதென ஜாதிக ஹெல உறுமய விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## அன்னாசி

**Botanical Name- Ananas sativus**
**Family-Bromeliaceae**
**Engl- Pine apple**
**Sinh-Annasi**

அன்னாசிப்பழத்திற்கு வெப்ப நாடுகளின் ராணி என்ற பெயர் உண்டு. இதனைத் தமிழில் பறங்கித்தாழை, செந்தாழை என்றும் அழைப்பதுண்டு.

கி.பி 1548 க்கு முன்பிருந்தே இதனை இந்தியாவில் பழத்திற்காக சாகுபடி செய்து வருகின்றார்கள். மஞ்சரியிலுள்ள பூக்கள் இணைந்து பெரி (Berry) கனியைத் தோன்றுவிக்கின்றன. மஞ்சரித் தண்டு கனிக்கு மேல் வளர்ந்து இலை போன்ற பூவடிச் செதில்களை உண்டாக்குகின்றன. கனியில் பல கோண வடிவில் புறத்தில் காணப்படுபவை பூக்களேயாகும்.

இதன் வயது 18- 24 மார்தங்கள் ஆகும். அடிவேரிலிருந்து வரும் கன்று பழ உச்சியில் சில இலைகளுடன் கூடிய செடிப்பகுதி இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது.

அன்னாசியை 500- 1200 மீற்றர் உயரப்பகுதியில் வளர்க்கலாம். இதனுடைய இலை, காய், பழம் முதலியவை மருத்துவ குணம்மிக்கவை.

**100 கிராம் அன்னாசிப்பழத்திலுள்ள சத்துக்கள்**

புரதம்-0.4 கிராம்
கொழுப்பு- 0.1 கிராம்
காபோவைதரேற்று- 10.8 கிராம்
நார்ப்பொருள்-0.5 கிராம்
கல்சியம் - 20 மில்லி கிராம்.
பொசுபரசு-9 மில்லி கிராம்
இரும்பு-1.2 மில்லி கிராம்
கரோட்டின் 18 மைக்ரோ கிராம்
தயமின் -0.2 மில்லி கிராம்
உயிர்ச்சத்து சி-39 மில்லி கிராம்.

**மருத்துவப்பண்புகள்**

✳அன்னாசிப்பழம் இனிப்பாக இருக்கும். பித்த நோய்களை குணமாக்கும். அன்னாசிப்பழத்துடன் தேன் கலந்து உண்டுவர உடல் அழகும் வலிமையயும் அழகும் கூடும். வெள்ளை நோய் குணமாகும்.

✳ அன்னாசிப்பழச்சாற்றுடன் சீனிப்பாகு கலந்து தொடர்ந்து 60 மில்லி தினமும் உண்டு வர மண்டைகுத்தல், தலைவலி ஆகியவை நீங்கி இருதயம் பலப்படும்.

✳பழுக்காத காயை துண்டுகளாகச் சீவிக் கொதிக்க வைத்துச் சாப்பிட மலம் இளகிக்கழியும்.

✳பூவை உலர்த்தித் தூள் செய்து நாள் ஒன்றிற்கு 3 முறை ஒரு கிராம் வீதம உண்டு வர புளிப்பேப்பம், நீர் வேட்கை, வாந்தி நீங்கும்.

✳இலைச்சாற்றை சீனி கலந்து ஒரு மேசைக்கரண்டியளவு அருந்த விக்கல் நிற்கும்.

✳அன்னாசிப்பழச்சாற்றைச் சூடுபடுத்திக் குடித்தால் (30 மில்லியளவு) வாந்தி, வயிற்றுக் கடுப்பு காமாலை போன்ற உஷ்ண நோய்கள் நீங்கும்.


✳அன்னாசிப்பழ விதையை எலுமிச்சைப்பழச்சாற்றில் ஊறவைத்து உலர்த்தி பொடி செய்து தினமும் காலை, மாலை இருவேளையும் 2 கிராம் அளவிற்கு சாப்பிட்டு வந்தால் உடற் பருமன் குறையும்.

✳அன்னாசிப்பழச்சாற்றுடன் வெந்தயம் சேர்த்து சாப்பிட்டு வந்தால் குடல் வலிவடையும்.

✳ அன்னாசி இலையை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து குடித்து வந்தால் உடலில் உள்ள கொழுப்பு கரையும்.

✳ இதன் பழச்சாறு 1000 மில்லிக்கு 500 கிராம் சீனி சேர்த்து மணப்பாகு காய்ச்சி வெப்பகாலத்தில் அருந்திவர உடல் உஷ்ணத்தை நீக்கி உடலிற்கு தெம்பைக்கொடுக்கும்.

✳அன்னாசிப்பழச்சாறு 15 மில்லி இரவில் தொடர்ந்து 7 நாட்கள் அருந்தி வர குடற் புழுக்களை அழிக்கும்.



✳ இப்பழத்தின் ஒரு துண்டை உணவிற்கு பின்பு உண்பதால் உணவு எளிதில் ஜீரணமாகும். இது மூச்சு க்குழலை தடை செய்யும். டிஃப்திரியா என்னும் நோயை நீக்கி வீக்கத்தை கரைக்கும் தன்மை கொண்டது.

✳ அன்னாசிப்பழத் துண்டுகளை தூய தேனில் ஊறவைத்து உண்பதால் மருத்துவக் குணங்க்ளும் கூடக்கிடைப்பதோடு ஒவ்வாமை போன்ற நிலைமைகளையும் ஏற்படுத்தாது.

ஆனால் கர்ப்பிணிப் பெண்கள் முக்கியமாக முதல் ஐந்து மாதங்களுக்கு அன்னாசி பாவிப்பதை தவிர்க்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் மீசாலை போன்ற பகுதிகளில் அன்னாசி தானாக வளர்ந்துள்ளமை குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.


இது 5.5 -7.0 கார, அமில நிலை உள்ள நிலங்களிலேயே நல்ல விளைச்சலைக்கொடுக்கும் என்பதும் அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே இக்கோடை காலத்தில் கிடைக்கக்கூடிய மருத்துவக் குணங்கள் நிறைந்த அன்னாசி யூஸினை செயற்கை இரசாயனப்பதார்த்தம் கலந்த யூஸ்களை தவிர்த்து பயன்படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# இலங்கைப்படையினருக்கு பயிற்சி வழங்க அமெரிக்கா, இந்தியா இணக்கம்





(கொழும்பு)

இராணுவத்தினருக்கு பயிற்சிகளை வழங்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை இந்தியாவும் அமெரிக்காவும் ஏற்றுக் கொண்டுள்ளதாக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூரில் பிராந்திய பாதுகாப்பு மாநாட்டின்போது தனிப்பட்ட ரீதியில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவத்தினரை மேம்படுத்தும் முகமாக இந்த பயிற்சிகள் வழங்கப்படவேண்டும் என்று கோத்தபாய கோரிக்கை விடுத்தார்.

அதேநேரம் இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமுலாக்கம் மற்றும் அதன்மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்திய மற்றும் அமெரிக்க பிரதிநிதிகளுக்கு எடுத்துரைத்தார்.

எனினும் தமது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை தொடர்ந்தும் பேண இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் கற்றுக்கொண்ட பாட ஆணைக்குழுவின் அமுலாக்கம், நிரந்தர சமாதானம் என்பன அவசியமானவை என்று இந்திய மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல்களில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அமெரிக்க கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் மார்டின் டெம்சே, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி ஆகியோர் பங்கேற்றதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ-2)

## அம்பாந்தோட்டை துறைமுகம் ஊடாக வாகன இறக்குமதி

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் வாகன இறக்குமதி, மீள் ஏற்றுமதி பராமரிப்பு பணிகள் இன்று முதல் ஆரம்பமாகிறது.

கொழும்பு துறைமுகத்தில் நிலவும் நெரிசல் காரணமாக இறக்குமதிக்காக வாகனங்களை ஏற்றிவரும் கப்பல்கள் துறைமுகத்தின் வெளியில் நங்கூரமிட நேரிடுகிறது. இதனால் தாமதங்களும் ஏற்படுகின்றன.

இப்புதிய ஏற்பாட்டின் மூலமாக தாமதங்களைக் குறைக்க முடியும் எனவும் துறைமுக அதிகார சபை தெரிவிக்கிறது. (அ-7)

## ஏழாயிரம் பேரின் வாக்காளர் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் தங்களை பதிவு செய்து கொள்ள விண்ணப்பித்த 7 ஆயிரம் பேரினுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் இம்முறை 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் தங்களுடைய பெயர்களை இணைத்துக்கொள்ள விண்ணப்பிப்போர் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

கடந்த வருடம் ஜுன் மாதம் நிரப்பப்பட்ட சுமார் 7 ஆயிரம் நுவரெலிய மாவட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் உள்ளதால் கட்டாயமாக மீள் பதிவு சரிவர செய்ய வேண்டும். இது காலத்தின் சமூக ரீதியான கட்டாயம் என்பதை மலையக சமூகம் புரிந்து செயற்பட வேண்டும்.

கடந்த வாரம் நுவரெலியா மாவட்டத்தில் கொழும்பு தேர்தல் திணைக்களம் மற்றும் பவ்ரல் ஆகியன இணைந்து நடத்திய வாக்காளர் பட்டியல் திருத்தம் சம்பந்தமான செயலமர்வில் கடந்த ஜுன் மாதம் பதிவு செய்யப்பட்ட நுவரெலியா மாவட்ட மலையக வாக்காளர்களின் 7 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கிராம சேவ…கர்களின் பங்களிப்பு போதுமானதாக இல்லாத காரணத்தை தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்து மேலதிக உத்தியோகத்தர்களை தேர்தல் திணைக்களம் நியமித்து நிராகரிக்கப்பட்ட 7 ஆயிரம் வாக்காளர் படிவங்களையும் திருத்தம் செய்து வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருந்தேன்.

அதற்கிணங்கித்தான் உத்தியோகத்தர்களை நியமித்து 7 ஆயிரம் விண்ணப்பங்களையும் திருத்தி வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கோட்டமட்ட ஆரம்பப்பிரிவு சித்திரப்போட்டி முடிபுகள்

(பூந்தோட்டம்)

செட்டிகுளம் கோட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றியீட்டியுள்ள மாணவர்களின் பெயர் விபரங்களை வவுனியா தெற்கு வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசபாதம் அறிவித்துள்ளார்.

இதில் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**தரம்–1**

என்.எவ்.நிதா (அல்ஹாமியா முஸ்லிம் வித்தியாலயம்), வே.மனோஜினி (பாவற்குளம் கலைமகள் வித்தியாலயம்),எவ்.பஸ்ரா (அல் அமீன் முஸ்லிம் ம.வி.)

**தரம்–2**

ர.சதாஹ் (தாருல் உலூம் முஸ்லிம் வித்தியாலயம்), அ.டினோஜன் (பெரிய நொச்சிக்குளம் றோ.க.வித்தி.), க.பிருசாந்தன் (கற்காரங்குளம் இளங்கோ வித்தி.)

**தரம்–3**

எம்.நிஷாத் (அல்.அமீன் முஸ்லிம் ம.வி.), ஆ.தனுகரன் (வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம்), ந.சுஜீவன் (அருவித்தோட்டம் சிவானந்தா வித்தி.)

**தரம்–4**

ஆர்.நிக்காஸ் (தாருல் உலூம் முஸ்லிம் வித்தியாலயம்), த.கிசோதன் (கற்காரங்குளம் இளங்கோ வித்தி.), யோ.வியாசினி (முதலியார் குளம் றோ.க.வித்தி.)

**தரம்–5**

ஏ.நிப்லா (அல்.அமீன் முஸ்லிம் ம.வி.), ச.டனோஸ்ரிகா (முகத்தான்குளம் அ.த.க.பா.), ரா.விதுஷா (அருவித் தோட்டம் சிவானந்தா வித்தி.) (அ-9-266)

## பூச்சுகளில் ஈயத்தின் அளவு தொடர்பில் புதிய விதிமுறை

வர்ணப்பூச்சுக்களில் அடங்கும் ஈயத்தின் அளவு தொடர்பில் புதிய விதிமுறைகளை அமுல்படுத்துவதற்கு நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார காரணங்களைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுற்றாடல் மற்றும் சுகாதாரம் தொடர்பான பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

நுகர்வோர் அதிகாரசபை, சுகாதார அமைச்சு, சுற்றாடல் அமைச்சு உள்ளிட்ட பல பிரிவுகளுடன் கலந்தாலோசித்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கமைய சிறுவர்கள் பயன்படுத்தும் விளையாட்டுப் பொருட்களுக்கு ஒரு கிலோ கிராம் வர்ணப்பூச்சுக்கு 90 மில்லிகிராம் ஈயம் பயன்படுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவர்களுக்கு பயன்படுத்தும் ஒரு கிலோ கிராம் வர்ணப்பூச்சுக்கு 90 மில்லிகிராம் ஈயமும் நிலத்திற்கு பூசும் ஒரு கிலோகிராம் வர்ணப்பூச்சுக்கு 600 மில்லிகிராம் ஈயமும் கலக்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகள் அடுத்த வருடம் முதல் அமுலுக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.


(அ-2)

## அவுஸ்திரேலியா சென்ற 88 இலங்கையர் கைது

(கிறிஸ்மஸ்தீவு)

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சென்ற 88 இலங்கையர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் வைத்து அவுஸ்திரேலிய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு பிரிவினரின் விமானம் இலங்கையர்கள் சென்ற இந்த படகை கண்காணித்துள்ளது. இதனையடுத்து விமானத்தில் இருந்த அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டதை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை தமிழர்களான இந்த சந்தேக நபர்கள் 30 நாட்கள் படகில் பயணித்து அவுஸ்திரேலியாவை சென்றடைந்துள்ளனர். (அ-2)





யாழ்.கடற்படையினரால் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வைத்தியர் கடற்படை வீரர் ஒருவரினை பரிசோதிப்பதனையும் இரத்ததானம் வழங்கும் கடற்படை வீரர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:–உ.சாளீன்)

# ஐ.நா. பாதுகாப்புச்சபை தன் கடமையை கண்ணியமாகச் செய்யத்தவறியுள்ளது !

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் இன்றைய நிலை அவர்தம் வரலாற்றில் என்றுமே கண்டதில்லை. தமிழ் மக்களின் வாழ்வுரிமை உட்பட அனைத்துரிமைகளுமே நிராகரிக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பேரவலங்கள் இனியும் நிகழாதிருக்க சட்டபூர்வமான முக்கியமான விடயங்களை ஆராய்வது பொருத்தமுடையதாகும்.

ஐக்கிய நாடுகள் முறைமையின் கீழ் அரசுகளும் தேசிய இனங்களும், சிறுபான்மையினரும் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிற்குமான கடமைகளும், உரிமைகளும், அதிகாரங்களும், எவை என்றும் உரிமைகளும், உத்தரவாதங்களும் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றே இக்கட்டுரை கூறுகின்றது.

அரசுகளும் தேசிய இனங்களும் சிறுபான்மையினரும் இன்றைய சர்வதேச சட்டத்தின் விடயப்பொருட்களாக பரிணாமம் பெற்றிருப்பதனாலும், இலங்கையின் தமிழ்பேசும் மக்கள் தவிர்க்க முடியாதபடி- சர்வதேச சட்டத்தின் விடயப்பொருளாக மட்டுமன்றி சர்தேச சட்ட முறைமைகளின் அடிப்படையில்-உரிமைகளுக்கும், உத்தரவாதங்களுக்கும், உரித்துடையவர்கள் என்பதாலும், இலங்கை அரசினது சகல அதிகாரங்களும் சிறப்புரிமைகளும் சர்வதேச சட்டத்தினதும், ஐக்கிய நாடுகள் சபையின் சட்டத்தொகுப்புகளில் இருந்தும் ஊற்றெடுக்கின்ற காரணத்தாலும், மேற்கூறப்பட்ட அணுகுமுறை மட்டுமே சட்ட விளக்கங்களையும், சட்டத்தின் ஆட்சியை நிலை நாட்டவும் வழிகாட்டும்.

வரலாற்று ரீதியாக- அரசுகளுக்கு தன்னிச்சையான இறைமையதிகாரங்கள் இருந்தாலும் அரசுகளின் - சங்கம்- Society of states என்ற சர்வதேச எண்ணக்கரு வியாபித்ததுடன் அரசினது இறைமையதிகாரத்தின் மீது சட்ட, அரசியல்- வரையறைகள் விதிக்கப்பட்டாயிற்று. நாடுகளின் கழகங்கம் League of nation நடைமுறையிலிருந்த காலகட்டத்தில் ஆரம்பமாகி, ஐக்கியநாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்டதுடன் இறைமையதிகாரத்தின் மீது- கட்டுப்பாடுகளைச் சுமத்தும் விதிகளும் ஐ.நாவை உருவாக்கிய பட்டயத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஜனநாயகம்-பாகுபாடுகாட்டாமை, சமத்துவம், சுயநிர்ணயஉரிமை உட்பட அனைத்து மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தல் போன்ற விடயங்கள் அரசின் தன்னாதிக்கத்திற்கு சாவுமணி அடிக்கின்றன என்பதே, சர்வதேச சட்ட வல்லுநர்களது நிரந்தரமான கருத்துக்களாகும்.

கனேடிய உயர்நீதிமன்றம் - குபெக்- இறைமைக்கோரிக்கை வழக்கு தொடர்பில் வெளியிட்ட தீர்ப்பில் இறைமையதிகாரத்தை அரசு பிரயோகிப்பதன்முன் அந்த அரசிற்குரிய நிபந்தனைகளைச்சுட்டிக்காட்டியது. தன் ஆள்புல எல்லைக்குள் வாழ்கின்ற மக்களை ஜனநாயகம், சமத்துவம், நல்லாட்சி, சமஸ்டி ஆட்சிமுறை, சிறுபான்மையோர் பாதுகாப்பு

கலாநிதி: ச.பரமலிங்கம்

## 2009 மே இல் இலங்கைத் தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்ட அவலம் சர்வதேச சட்ட முறைமையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது

போன்றவற்றால் தன் மக்களை பாதுகாக்கின்ற அரசு மட்டுமே ஆள்புல ஒருமைப்பாட்டு கோரிக்கைக்கும், அரச இறைமையதிகார உரிமைக்கும் உரித்துடையது என்றும் கனேடிய அரசும், அரசியற் சட்டமும் அத்தனை விதிமுறைகளை அரசியற் சட்டத்திலும், நடைமுறையிலும் அங்கீகரித்து, ஆட்சி நடாத்துவதால் அந்த அரசு, அடக்குமுறையானது எனக்கொள்ள முடியாத காரணத்தில் கனேடிய அரசு ஆள்புல ஒருமைப்பாட்டைக் கோருவதற்கு உரித்து உடையது எனவும்- தெரிவித்தமை இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

எனவே, பிரான்சு மொழிபேசும் மக்கள், உரிமைகளும், நீதியும் நிராகரிக்கப்பட்ட மக்களல்ல என தீர்மானித்து, இவ்வாறான அரசின் உரிமை பற்றிய சட்டவிளக்கத்தின் அடிப்படையிலேயே இலங்கைவாழ் தமிழ் மக்களின் அந்தஸ்து நோக்கப்பட வேண்டும்.

1948 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் முன்னுரையில் அடக்கப்படுகின்ற மக்கள், கொடுங்கோன்மைக்கு எதிராக போராடாமல் இருக்க வேண்டுமானால், அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென தெரிவித்தது. இதற்குப்பிற்பட்ட காலகட்டங்களில் ஐ. நா. சபையினால், மனித உரிமைகளைப் பாதுகாத்து, அவ்வுரிமைகளை உத்தரவாதப்படுத்தும் நோக்கில் International Covenant on Economic Social and Cultural Rights and International Covenant on Civil and Polititcal Rights என்ற இரு உரிமைமனுக்களை உருவாக்கி, நாடுகளது ஒப்புதலைப் பெற்றது. சித்திரவதைக்கெதிரான சர்வதேச ஏற்பாடு, இனப்பாகுபாடு, சகலவிதமான பாரபட்சம் ஆகியவற்றை அகற்றுவதற்கான, சர்வதேச ஏற்பாடு போன்ற மனித உரிமை சட்ட வரைபுகள், தன்னிச்சை அதிகாரத்தின் மீது மேலும் வரையறைகளை விதிக்கின்றன. சுருங்கக்கூறின், ஐ.நா. சபை அமைக்கப்பட்டபின் வளர்ச்சி பெற்ற இன்றைய சர்வதேச சட்டமுறைமையும்- சர்வதேச சட்டமும் இருவகையான விடயப்பொருட்களை அங்கீகரிக்கின்றன. அவையாவன,1- அரசு 2- அரசல்லாத அமைப்புகள்

தேசிய இனங்களும், சிறுபான்மைச் சமூகங்களும் இந்த இரண்டாவது வகையினுள்ளடக்கப்படுகின்றன. சர்வதேச நீதிமன்றம், நியாயமன்றங்களது தீர்ப்புகளின்படி அரசு, தேசிய இனங்களதும் சிறுபான்மையினரதும் உரிமைகளை அங்கீகரித்து அரசியற் சட்டத்தில் காப்பீடுகளை உருவாக்கியிருந்தால் மட்டுமே சர்வதேச சட்டத்திற்கமைவாக அரசியற் சட்டமாக கொள்ளமுடியும்.

எந்தவொரு அரசும் சர்வதேச சட்டத்திற்கு உட்பட்டதனால், இதற்கு முரணாக சட்ட ஏற்பாடுகளை உருவாக்க முடியாது. ஒரு தேசிய இனத்தினது அரசியற் பொருளாதார, கலாசார, மத உரிமைகளை அந்நாட்டின் இன்னொரு இனம் தீர்மானித்தால் அம்முறைமை சர்வதேச சட்டத்திற்கு முரணாவதுடன் அது அடக்கு முறைக்கு வழிவகுக்கும். உள்நாட்டு முரண்பாடுகளை தீர்ப்பதற்கு சர்வதேச சட்டமும் அதன் பிரமாணங்களும் அணுகப்படுவதே நீதியையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்தும்.

சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் ஒரு அரசு சிறப்புரிமைகளையும் அங்கீகாரத்தையும் அனுபவிக்கவேண்டுமானால் உள்நாட்டு ஆட்சி விவகாரங்களில் சிறுபான்மையினரதும் சர்வதேச சட்டத்தின் படியான உரிமைகளை உறுதிப்படுத்தும் கடமைப்பாடும் உடையது. உலகின் பல பாகங்களிலும் அரசுகள் சர்வதேச கட்டுப்பாட்டிலிருந்து விலகிச் சென்றமையால் உருவான மனித அவலங்களை தடுப்பதற்காக, இன்று பாதுகாப்பதற்கான கடமை என்ற சட்டக்கோட்பாட்டை இன்று தாராண்மை ஆட்சிமுறை நாடுகள் வலியுறுத்தி, அதன் அடிப்படையில் இராணுவத் தலையீட்டையும் சட்டவலுவாக்க முனைகின்றன.

கொசோவா மக்களினது அரசியற் சட்ட அந்தஸ்து, நிராகரிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து உருவான மனிதப்பேரழிவைத் தடுக்க Brown Lie நாடுகள் இராணுவத் தலையீட்டின் மூலம் அதனை முடிவுக்குக் கொண்டு வந்தன. அதனை அடுத்து 1999 ஆம் ஆண்டு பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட 1244 தீர்மானம், கொசோவா மானிலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையின் கீழ் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தியது. இத்தீர்மானத்தின் நோக்கங்களில் ஒன்று கொசோவா மக்களுக்கு தன்னாட்சியை வழங்குவதும் அதற்கான அரசியற் சட்ட நிறுவனங்களை உருவாக்குவதுமாகும். ஐக்கியநாடுகள் சபை உள்நாட்டு பிரச்சினைகளுக்கும் அரசயற் சட்ட அந்தஸ்து மறுக்கப்பட்ட மக்களுக்கும் இவ்வாறான நடவடிகைகளின் மூலம் சர்வதேச சட்ட ஆட்சியை அமுல் நடாத்த முன்வர வேண்டும்.

மேற்கண்டவாறான இந்நூற்றாண்டிற்கு ஏற்புடையதான சர்வதேச சட்டங்களினதும்- சட்ட முறையினதும் அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டும் என்றே – அகிலமெங் கும் வாழும் உரிமை மறுக்கப்பட்ட மக்கள் கோருகிறார்கள். அவர்தம் கோரிக்கைகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

ஆகவே, இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களையும் அவர்களது இறைமைக் கோரிக்கையையும் சர்வதேச சட்டத்தினது அடிப்படையில் பரிசீலிப்பதும் தீர்வு பற்றி சிந்திக்கப்படுவதும் மட்டுமே சட்ட ஆட்சியை நெறிப்படுத்தும். இது தொடர்பில் மாற்றுக் கருத்துகள் இருப்பின் அவை சர்வதேச சட்டத்தை தவறாகப் பொருள் கொள்வதாகவே எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

இலங்கைவாழ் தமழ்பேசும் மக்களினது சட்ட அந்தஸ்து பிரச்சினைகளும் சிக்கல்களும் இலங்கை அந்நிய ஆதிக்கத்திற்கு உட்படாத காலத்தில் தமிழ் அரசுகள் இருந்தன; அவை போர்த்துக்கீசராலும் ஆங்கிலேயராலும் அழிக்கப்பட்டன. ஒரு இனம் ஒரு வரையறுக்கப்பட்ட பிரதேசத்தின் மீது இறைமைக்கோரிக்கை மேற்கொள்ளும்போது வரலாற்று ரீதியான விளைவுகள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும் என்பதே சர்வதேச சட்ட வல்லுநர்களது கருத்தாகும். இவ்வாறான ஆள்புலம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச நீதிமன்றம் மேற்கூறப்பட்ட அபிப்பிராயத்தை அங்கீகரித்துள்ளது. ஐ.நா. பிரமாணங்களின் அடிப்படையில்



குடியேற்ற நாடுகள் ஆசிய, அபிரிக்க மக்களுக்கு சுதந்திரம் வழங்கியபோது குடியேற்றவாதிகளால் உருவாக்கப்பட்ட ஆள்புல எல்லைகளுக்குள்ளேயே அரசுகளை உருவாக்கியமை- நீதிக்கப்பாற்பட்டதாகும். இவை இனங்களுக்கிடையில் மோதல்களுக்கு வித்திட்டன.

இவ்வாறான பின்னணியில்தான் தமிழ் பேசும் மக்களது புராதன அரசுகளும் ஆள்புல எல்லைகளும் அகற்றப்பட்டன. ஆகவே, குடியேற்றவாத ஆட்சியில் நிகழ்ந்த அரசியல் சட்டவிடயங்கள், தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட சர்வதேச தவறுகளாக வலியுறுத்தப் படவேண்டும். குடியேற்ற முறைமை முடிவுற்ற பின்னரான அரசியல் ஏற்பாடுகள், தமிழ் மக்களது உரிமைகள் எதனையும் உத்திரவாதம் செய்யாது, மேலும் மோசமான- அந்தஸ்து அற்ற மக்களாக ஆக்கியது. இலங்கை சுதந்திர மசோதா பிரித்தானிய பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட, 1947 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி- சுதந்திரத்தின் பின் அறிமுகம் செய்யப்படும் அரசியற் சட்டங்கள் தமிழ்பேசும் மக்களுக்கு நீதி வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கை இருமொழி பேசும் பிராந்தியங்களைக் கொண்டது என்றும் ஆகவே, ஒற்றையாட்சி முறை ஜனநாயகத்தை தோல்வியடையச் செய்யும் என்றும் முன்மொழியப்பட்டது என்பது இன்று வலியுறுத்தப்படவேண்டும்.

### 1972, 1978 ஆம் ஆண்டு அரசியற் சட்டங்கள்

1970 ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுப் பேரவையில், தமிழர் பிரதிநிதிகள் பங்கு கொண்டு, 1956 ஆம் ஆண்டு முதல் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களால் முன்மொழியப்பட்ட சமஸ்டிக் கோரிக்கையின் அடிப்படையில் 3 சமஸ்டி அலகுகள் சிங்கள மக்களுக்கும், தலா ஒவ்வொரு சமஸ்டி அலகுகள் தமிழ், முஸ்லீம் மக்களுக் கெனவும் அரசியற் சட்டம் சமஸ்டி முறையானதாக வரையப்படவேண்டுமெனவும் திருத்தம் கொண்டு வந்தனர். *தமிழ் பேசும் மக்களினது, இந்த ஜனநாயகக் கோரிக்கையை நிராகரிக்கின்ற ஒரு இனத்திற்கு உரிமையை, சர்வதேச சட்டம் அனுமதிக்கவில்லை.*

சுதந்திர இந்தியாவின் குடியரசு அரசமைப்பு வரையப்பட்ட வேளையில் அந்நாட்டின் உன்னத தலைவர்களது அரசியற் சாணக்கியமும் அவர்கள் ஆதரித்து நின்ற ஜனநாயகத்தின் மெருகிற்கும், வெற்றிக்குமான சிபாரிசுகளும் அனைவராலும் அவதானிப்பது உரிய கற்கையாக அமையும்.

சமஸ்டிக் கட்சியினது திருத்தப் பிரேரணை, அரசமைப்பு பேரவையில் தோற்கடிக்கப்பட்டபின், அங்கிருந்து அக்கட்சி வெளியேறமுன் *தந்தை செல்வா* பின் வருமாறு தெரிவித்தார். "எமது மக்களது அரசியல் கலாச்சார, பொருளாதார மேம்பாட்டிற்காக, நாம் நீண்டகாலமாக கோரி வந்த சமஸ்டித்திட்டம் நிராகரிக்கப்பட்ட நிலையில் மொழியுரிமை, அரசியல் உரிமை அற்ற வர்களாக எம்மை ஆக்கும் அரசியற் சட்ட வரைவில் பங்கெடுப்பது அர்த்தமற்றது. நாம் இங்கிருந்து வெளியேறுவது எவரையும் துன்பப்படுத்துவதற்கல்ல, எமது மக்களது கௌரவத்திற்காகவே. "

இந்த அரசியற் சட்டத்தின் அடுத்த அங்கமானது 1978 ஆம் ஆண்டு வரையப்பட்ட பொழுதும் தமிழர் தரப்பு பங்கெடுக்கவில்லை. மாறாக வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஆதரித்து நின்றார்கள்.

இதனையடுத்து, முள்ளிவாய்க்கால் வரை மூன்று தசாப்தங்கள் உருண்டோடின. இதில் தமிழர்களது கண்ணீரும் குருதியும் கலந்தேயிருந்தன. இவ்வாறான அண்மைக் கால நிகழ்வுகளின் அடிப்படையிலும், சர்வதேச சட்டவளர்ச்சி, சர்வதேச சட்ட முறைமை என்ற, ஏற்பாடுகளின் அடிப்படையிலும் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களது சர்வதேச சட்ட அந்தஸ்து தீர்மானிக்கப்படுவதற்கான காலம் அவதியாகிவிட்டது. எனவே, ஐக்கிய நாடுகள் சபை இவ்விடயம் தொடர்பில், தொடர்ந்து உதாசீனம் செய்யும் உரிமையற்றது. இந்த அமைப்பு- சர்வதேச சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையிலும், கடந்த காலங்களில்- இன மோதல்களின்போது கடைப்பிடித்த வேலைத் திட்டங்களினது அடிப்படையிலும், இலங்கையின் இனமோதல் சிக்கல்களிலிருந்து பலவீனமான மக்கள் சமுதாயத்தை இன அழிப்பு, மனித உரிமை மீறல்கள் என்ற கோர நிகழ்வுகளிலிருந்து பாதுகாத்து, நீதியை வழங்கி அம் மக்களை மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லாத பாதுகாப்பு முன்னேற்பாடுகளை அமுல் நடாத்த முன்வரவேண்டும்.

குறிப்பாக, பாதுகாப்புச் சபை தன் கடமையை கண்ணியமாகச் செய்யாமை தொடர்பில் சட்ட மீளாய்வுக்கும் இடமின்மை, சர்வதேச சட்ட முறைமையைக் கேள்விக் குறியாக்கும் விடயங்களில் ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பிரமாணங்கள் வரையப்பட்டபோது, பாதுகாப்புச்சபையின் மீது அதிகாரங்கள் குவிக்கப்பட்ட, உன்னதமான நோக்கங்கள் உணரப்படுமானால் தமிழ்பேசும் மக்களது சர்வதேச சட்ட அந்தஸ்து நிர்ணயநாளும் நிரந்தர அமைதியும் வெகுதூரத்தில் இல்லை.

# நாட்டின் அரைப்பங்கு மக்களுக்கு அடிப்படை தேவைகள் பூர்த்தியாக்கப்படவில்லை

## போருக்கு பிந்திய கோல்அப் நிறுவன அறிக்கையில் தகவல்

**போரின் பின்னர் இலங்கையின் அரைவாசிப் பங்கினர் நிதி மற்றும் உணவு, இருப்பிடம் என்பவற்றில் பாரிய பற்றாக்குறையை எதிர் நோக்குவதாக சர்வதேச சமூக, பொருளாதார ஆய்வு நிறுவனமான கோல்அப் தெரிவித்துள்ளது.**

அந்நிறுவனம் தெரிவிக்கையில்,

முன்னெப்போதும் இல்லாத வகையில் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 53 வீதமானோர் இந்தப் பற்றாக்குறைகளுக்கு ஆளாகியிருந்தனர்.

போதிய நிதி மற்றும் இருப்பிடம், உணவு என்பவற்றைப் பெறுவதில் இவர்கள் கஷ்டங்களை எதிர்நோக்கியதாகவும் கோல்அப் குறிப்பிட்டுள்ளது.

எனினும் தமது வாழ்க்கைத்தரம் உயரும் என்ற நம்பிக்கையை இலங்கையர்கள் கொண்டிருந்ததாகவும் அந்நிறுவன ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலைமை ஆப்கானிஸ்தானின் நிலைமையுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் பொருளாதாரம் நலிவடைந்து மக்கள் கஷ்டப்படும் நிலையில் இலங்கையின் ஜனாதிபதிக்கான மக்கள் செல்வாக்கு இன்னும் 92 வீதத்தில் உள்ளதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் கோல்அப் ஆய்வு விடயங்களை இலங்கை மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார். ஆப்கானிஸ்தானுடன் ஒப்பிடும் அளவுக்கு இலங்கையின் பொருளாதாரம் நலிவடையவில்லை என்றார்.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கோல்அப் நிறுவனம் பிரபல்யம் வாய்ந்த நிறுவனம். இந் நிலையில் அதன் அறிக்கையை பொய் என்று கூறமுடியாது.

எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு 92வீத ஆதரவு இருப்பதாக கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார். (அ-2)

## பிரதமரை சிங்கப்பூரில் சந்தித்தார் ரணில்

(கொழும்பு)

பிரதமர் டி.எம்.ஜயரத்னவை நேற்று முன்தினம் நேரில் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரதமருக்கு தமது பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பிரதமரை அங்கு சென்று நேரடியாக பார்வையிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சுக நலன்களை விசாரித்ததோடு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இதன்போது பிரதமரின் குடும்ப அங்கத்தினர்களையும் எதிர்க்கட்சித் தலைவர் சந்தித்தார். இந்நிகழ்வில் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளர் சாகல ரத்நாயக்கவும் கலந்து கொண்டார். (அ-7)

## கடத்தல் குற்றச்சாட்டில் 27 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களை வெளிநாட்டிற்குக் கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட 27 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களை அனுப்பும் திட்டத்தின் கீழ் தங்கியிருந்த 149 பேரை கேரளாவின் கொல்லம் பகுதியில் வைத்து இந்தியப்பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இந்நிலையில் அவர்களில் 27 பேர் சுற்றுலா விசாவில் இந்தியாவுக்கு வந்து இந்தியாவில் உள்ள அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இவர்களையே நீதிமன்றம் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (அ-2)

## புலிகளுக்கு பணம் அனுப்பிய குற்றச்சாட்டில் இரண்டு இந்து ஆலயங்களுக்கு அபராதம்

கனடாவில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பணம் அனுப்பி வைத்த இரண்டு இந்து ஆலயங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த இரண்டு இந்து ஆலயங்களினதும் நிர்வாகிகள் கடந்த 2004 ஆம் ஆண்டில் புலிகளுக்குப் பணம் அனுப்பி வைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் போது தகுதியற்ற அறக்கட்டளைகளுக்கு பணம் அனுப்பி வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ரிச்மன்ட் ஹில் இந்து ஆலயம் மற்றும் மஷிசாகுலா இந்து ஆலயம் ஆகியவற்றுக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

முறையே ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மற்றும் 3 இலட்சம் டொலர் என்ற அடிப்படையில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு ஆலயங்களினதும் அறக்கட்டளைகள் தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்கு பணம் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற போது 70 வீதமான தமிழர் பிரதேசங்களே பாதிக்கப்பட்டதாகவும் கிடைக்கப்பெற்ற உதவிகளில் 80 வீதமானவை தென்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும் ரிச்மன்ட் ஹில் ஆலயத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு உதவிகளை வழங்கும் நோக்கில் பணம் அனுப்பி வைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். கனடாவின் வருமான முகவர் நிறுவனத்தினால் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## புலம்பெயர் தமிழர்களே இன்றே ஒன்று திரளுங்கள்!

### ஸ்கொட்லாந்து தமிழ் மக்கள் அறைகூவல்

(கொழும்பு)

தமிழர் தாயகத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்து எமது மண்ணை, எமது கலாச்ரத்தை ஆக்கிரமித்து சீரழித்துக் கொண்டிருக்கும் சர்வாதிகார குடும்ப ஆட்சியினை நடத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரித்தானியாவிற்கு வருகை தந்துள்ளார் என்ற செய்தி ஐரோப்பிய தமிழருக்கு மட்டுமல்ல உலகத் தமிழர்களையே சினம் கொள்ள வைத்துள்ளது என ஸ்கொட்லாந்து தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

ஸ்கொட்லாந்து வாழ் தமிழ் மக்கள் விடுக்கும் அவசர வேண்டுகோளிலேயே இச்செய்தி விடுக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் குற்றவாளி மஹிந்த ராஜபக்ஷ குடும்பமும் அவரது அடிவருடிகளும் தண்டிக்கப்படும் வரை உலகின் எந்த நாட்டுக்குச் சென்றாலும் துரத்தியடிப்போம் என்பதில் புலம்பெயர் தமிழர்கள் உணர்வோடும் உறுதியோடும் இருக்கின்றார்கள்.

அந்த உணர்வினை, உறுதியை இன்று புதன்கிழமை லண்டனில் வெளிப்படுத்த புலத்திலும் பலமாய் இருக்கிறோம் என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிசெய்ய புலம்பெயர் தமிழர்கள் நாங்கள் புயலாய் எழுவோம்.

காலத்தால் ஒன்றுபடுவோம்! கை கோர்த்து நிற்போம்! கூறுபட்டு தமிழ்ச் சமுதாயம் நூறு குழுவாக தோன்றி மாறுபட்டு சிந்தித்தால் வீழ்ச்சிதான்! காலத்தால் ஒன்றுபடுவோம் கை கோர்த்து நிற்போம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## கடன் பெற்றுக் கொள்வதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் பாதிப்படையும்

### ஜே.வி.பி.ஆதரவு அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடன் பெற்றுக் கொள்வதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் மேலும் பாதிப்படையக் கூடுமென ஜே.வி.பி. ஆதரவு காலனித்துவத்திற்கு எதிரான மக்கள் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் மேலதிகமாக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெற்றுக் கொள்ளும் திட்டமானது பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் அடிப்படையில் ரூபாவின் பெறுமதி இறக்கப்பட்டதாகவும் இதன் காரணமாக பொருளாதர்ரம் சரிவுகளை சந்தித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியானது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் மோசமாகப் பாதிக்கும் என்பதனை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டுமென காலனித்துவத்திற்கு எதிரான மக்கள் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)



யுனைற் றேட் மோட்டோர்ஸின் வாடிக்கையாளர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் யாழ். ரில்கோ சிற்றி ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட 512 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் விக்கிரமாரச்சி மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)



# சிறுவர் அரங்கம்

122

## பொறுமை கடலினும் பெரிது!

*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை*

**விளக்கம்: மக்கள் தன்னை ஏர் கொண்டு உழுது காயப்படுத்தினாலும் அதைப் பொறுத்துக் கொள்ளும் பூமியைப் போல, தன் மீது குற்றம் சாட்டி இகழ்பவர்களின் செயல்களைப் பொறுப்பது ஒரு தலைமகனுக்கு அழகு தரும்!**

மன்னர் புருஷோத்தமனுடைய மைத்துனன் மனோகரன் ஓர் அஞ்சாநெஞ்சன். தன் மனதில் தோன்றுவதை மறைக்காமல் எடுத்துரைப்பவன்.

மன்னர் சபையில் தனது அமைச்சர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடல் நிகழ்த்துகையில், மனோகரனும் அங்கு அமர்ந்து தனது கருத்துக்களை வெளியிடுவான்.

மன்னரின் கருத்துக்கு எதிரான கருத்துக்களைக் கூற மற்றவர்கள் தயங்கும் போது மனோகரன் அது தவறெனத் தோன்றினால் அவரை எதிர்த்துப் பேச தயங்கமாட்டான்.

தனது சகோதரனின் போக்கு ராணிக்குப் பிடிக்கவில்லை. பலமுறை அவள் மனோகரனைக்



கண்டிக்கும் போது மன்னர் அவளைத் தடுத்து விடுவார். ஒருநாள் சபையில் புருஷோத்தமன் தனது அரசாட்சியில் இளைஞர்களின் வேலையில் லாத்திண்டாத்தைப் பற்றி அமைச்சர்களுடன் விவாதித்தார். அப்போது வேலையற்ற இளைஞர்களுக்கு மாதம் 30 வரா கன்கள் உதவித் தொகை அளிக்கலாம் என்று நினைக்கிறேன்! என்றார்.

அமைச்சர்கள் அதைக் கேட்டு ஆகா! அற்புதமான யோசனை என்று பாராட்டினார்கள். ஆனால் மனோகரன் மட்டும், இது மதியற்ற செயல். உதவித் தொகை அளிப்பதால் அந்த இளைஞர்கள் சோம்பேறி ஆகி விடுவார்கள்.

இதை விடுத்து அவர்களுக்கு நிரந்தர வருமானம் தரும் வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்! என்று மன்னரின் கருத்துக்கு எதிர்மாறான கருத்தைக் கூறினான். அத்துடன் மன்னரின் ஏனைய நலத்திட்டங்களையும் விமர்சனம் செய்தான்.

சபையில் நடந்ததைக் கேட்டு சினமுற்ற ராணி தன் சகோதரனைப் பார்த்து, மன்னனை விமர்சிக்க உனக்கு என்ன தைரியம்? இந்த இராச்சியத்தை விட்டு இப்போதே வெளியேறு! என சீறி விழுந்தாள்.

ஆனால், அவளைத் தடுத்த மன்னர், அவனைக் கோபிக்காதே ராணி! அவன் மனதில் பட்டதைக் கூறுகிறான். தன் கருத்துப்படி தான் மற்றவர்கள் நடக்க வேண்டும் என்று மன்னன் நினைப்பது தவறு.

புத்திசாலிகள் கூறும் ஆலோசனைகளை பரிசீலித்து மக்களுக்கான திட்டங்களை வகுக்க வேண்டும். மனோகரன் புத்திசாலி. அவன் கூறுவதைக் கேட்போம்! என் றார்.

அவர் பொறுமையிழக்காமல் மனோகரனின் நலத்திட்டங்களைக் கேட்டு, அதை அப்படியே நடைமுறைப்படுத்தினார்.

அது முதல் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் முற்றிலும் ஒழிந்தது.

## நாவடக்கம் வேண்டும்!

### அம்புலி மாமா கதைகள்

*ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்*
*நன்றாகாதாகி விடும்*

**விளக்கம்: ஒரு குடம் பாலில் துளி நஞ்சு போல் பேசும் சொற்களில் ஒரு சொல் தீய சொல்லானால் அதுவரை கூறிய நல்ல சொற்கள் பயனற்றுப் போய்விடும்.**



ரவீந்திரன் ஒரு வேலையில்லாப் பட்டதாரி. எத்தனையோ நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்றும் நாவடக்கமின்றி பதில் கூறியதால் எங்குமே வேலை கிடைக்காமல் போயிற்று. அவன் தந்தை அவனுக்கு எத்தனை யோ முறை நாவடக்கத்தைப் பற்றி அறிவுரை அளித்தும் தேர்வு நேரத்தில் அவனையும் அறியாமல் ஏதாவது ஏடாகுடமாக பதில் அளித்து விடுவான்.

இப்படியே நீண்ட நாட்களாக வேலை கிடைக்காததால் ரவீந்திரன் ஒருநாள் தன்னை முழுவதுமாக மாற்றிக் கொள்ள முடிபு செய்தான். கேள்வி கேட்பவர் தாறுமாறாகக் கேட்டாலும் பொறுமையுடனும் பணிவுடனும் பதில் அளிக்கத் தீர்மானித்தான்.

சில நாட்களிலேயே அவனுக்கு ஒரு நிறுவனத்திலிருந்து நேர்முகத் தேர்விற்கு அழைப்பு வந்தது.

அவன் பயந்தபடியே தேர்வாளர் இடக்குமடக்காகக் கேள்விகள் கேட்டார். என்னப்பா பட்டம் பெற்று ஓராண்டு ஆகியுமா வேலை கிடைக்கவில்லை? என்றார். ஆமாம் சேர்! என்று சொன்னான் ரவீந்திரன். இதற்கு முன் வேலை செய்த அனுபவம் உண்டா?

இல்லை! வேலையே இதுவரை கிடைக்காததால் அனுபவத்திற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அனுபவம் இல்லாத உன்னை எப்படி வேலைக்குச் சேர்த்து கொள்ள முடியும்?.

தயவு செய்து ஒரு வாய்ப்புக் கொடுங்கள்! என் திறமை, உழைப்பு ஆகியவற்றை நிரூபிக்க ஒரு வாய்ப்புத் தாருங்கள்!

சரிதான் நீ அனுபவம் பெறவே ஆறு மாசம் ஆகும். அதுவரை நான் தண்டச் சம்பளம் கொடுக்க வேண்டுமா!

முதல் ஆறு மாதம் சம்பளமின்றியே வேலை செய்யத் தயாராயுள்ளேன்.

ரவீந்திரனின் அடக்கமான அதே சமயம் தன்னம்பிக்கையுடன் கூடிய பதில்கள் தேர்வாளருக்குத் திருப்தி உண்டாக்கியது. இருந்தாலும் அவன் பொறுமையை மேலும் சோதிக்க விரும்பினார்.

உன் திறமையின் மீது எனக்கு நம்பிக்கையில்லை. நீ சொல்வதை நம்பி உனக்கு எவ்வாறு வேலை கொடுக்க முடியும்?. என்று அவனைச் சீண்டினார்.

அதுவரை பணிவுடன் பதிலளித்த ரவீந்திரன் திடீரென பொறுமை இழந்தான்.

உங்களைப் போன்ற ஒரு சாதாரண நபர் இந்த நிறுவனத்தின் தலைவராக இருக்கும் போது திறமையுள்ள என்னால் வேலை செய்ய முடியாது என்று ஏன் நினைக்கிறீர்கள்? என்று முகத்தில் அடித்தாற் போல் கூறிவிட்டு அறையை விட்டு ரவீந்திரன் வெளியேறினான்.

ஒரு நிமிடம் பொறுமை காக்காமல் நாவடக்கத்தை மறந்து அவன் பேசிய பேச்சு நல்ல வேலை கிடைக்காமல் செய்துவிட்டது.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 25 இலட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)


ரம்புக்கன எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற 25 இலட்சம் ரூபா கொள்ளை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வான் ஒன்றில் வந்த சிலர் நேற்று அதிகாலை குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணிபுரிந்த இருவரை அச்சுறுத்தி வானில் வந்த கும்பல் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது. இது தொடர்பில் ரம்புக்கன பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

(அ-9)

# அம்மா பகவானின் திருக்கல்யாண நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பகவதி பகவானின் 36 ஆவது திருக்கல்யாண நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் ஸ்ரீ அம்மா பகவான் பாத பூஜை நிகழ்வுடன் 5 ஆவது வருட நிகழ்வாகக் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் மேற்குறிப்பிட்ட நிகழ்வு அதே நேரத்தில் நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியில் அமைந்துள்ள திவ்ஜ ஜீவன சங்க மண்டபத்திலும் நடைபெறும்.

இந்நிகழ்வில் சகல பக்தர்களையும் கலந்து கொண்டு இணையத்தளம் மூலம் ஸ்ரீ அம்மா பகவானின் நேரடி தரிசனத்தைப் பெற்று தங்களின் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் அறிவித்துள்ளனர்.

(அ-9)

# UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

**COMPLETION of Construction of Buildings at Ariviyal Nagar Complex, Kilinochchi, Faculty of Agriculture, University of Jaffna.**

1. The chairman, Procurement committee of University of Jaffna, now invites sealed bids from eligible and qualified bidders.This shall be a measure and pay contract.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction or above with the Institute for Construction Training and Development (ICTAD)
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.

| Bid ID | Discription of Work | Estimate Cost | Contract period | Reguired Grade | Reguired Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period |
| YA/CWP/AG-KLN/2012-B1 | Completion of Construction of Administrative Block & Lecture hall at Ariviyal Nagar Complex, Kilinochi, Faculty of Agriculture | Rs. 44.5 Million | 280 Calender Days | C5/M6 | 1,000,000.00 | 25th October 2012 |
| YA/CWP/AG-KLN/2012-B2 | Completion of Construction of Staff Quarters at Ariviyal Nagar Complex, Kilinochi, Faculty of Agriculture | Rs. 9.5 Million | 90 Calender Days | C7/M8 | 200,000.00 | 25th October 2012 |

5. Interestsd bidders may obtain Further information from the Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs.
Contact numbers are: Phone 021 2219201, Facsimile: 021 2219201
6. A complete set of Bidding Documents in English language may be pur chased by interested bidders on the submission of a written application to the Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna from the 6th of June, 2012 until 20th of June, 2012 from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non-refundable fee of Rupees five thousand (5,000.00) for each work.
7. Sealed Bids shall be Delivered or sent by registered post to the Chairman, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna to reach on or before 14.00 hrs on the 27th of June, 2012. Bids will be opened soon after closing, at 14.15 hrs on the 27th of June 2012 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period of 91 days from the date fixed for closing of Bids or any extended period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   in the form included in the section 09 in the Bidding Document.
   in favour of **"Vice Chancellor, Chairman, Procurement committee, University of Jaffna".**
   issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.
10. Pre bid one meeting will be held at the Ariviyal nagar Complex, Kilinochi at 10.30 hrs on the 15th June, 2012

*Vice Chancellor*
*Chairman, Procurement Committee,*
*University of Jaffna,*
*P.O Box 57, Thirunelvely,*
*Jaffna.*

(C-167)

# UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

**The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.**

| Work/Service Details | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum Grade |
|---|---|---|---|
| Providing Cleaning & Gardening services at the Administrative Block and the External Area, University of Jaffna | 10,000.00 | 500.00 | Any organizations who have minimum of 02 years experience in similar work. |
| Providing Cleaning & Gardening services at the Faculty of Medicine, University of Jaffna | 9,000.00 | 500.00 | Any organizations who have minimum of 02 years experience in similar work. |
| Providing Cleaning services at Ramanathan Academy of Fine Arts, Maruthanarmadam, University of Jaffna | 10,000.00 | 500.00 | Any organizations who have minimum of 02 years experience in similar work. |
| Construction of Sokage pit with Filter Trenches to Improve Waste water Disposal at Balasingam Hostel, University of Jaffna | 4,000.00 | 500.00 | Minimum ICTAD Grade C10 (Civil) |

Bid forms may be obtained from the Deputy ***Registrar/ Capital Works & Planning Unit University of Jaffna*** upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till **30.05.2012.**

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the **Registrar, University of Jaffna P.O.Box 57, Thirunelvely, Jaffna** or could be deposited in the bid box kept at **Registrar's Office, University of Jaffna.**

Bids will be accepted till 2.30 p.m on 08.06.2012 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

*P.O. Box 57,*
*Thirunelvely,*
*Jaffna.*
*18.05.2012*

(C-166)

*Registrar*
*University of Jaffna.*

# த. தே. கூட்டமைப்பு ஒரு கட்சியாக பரிணமிக்க வேண்டியது அவசியம்

## சுரேஸ் எம்.பி. பொங்குதமிழுக்கு செவ்வி

(கொழும்பு)

**இன்றைய காலகட்டம் என்பது வெறுமனே ஒரு நாடாளுமன்ற அரசியலுக்கானதொரு காலகட்டம் இல்லை. நாடாளுமன்ற அரசியல் தேர்தல் அரசியல் என்பது அந்தந்தக் காலகட்டங்களை எமது தேவைக்ளுக்குச் சாதகமாகப் பயன்படுத்துதல் என்ற மூலோபாயமே தவிர அதுவே. தமிழ் மக்களின் எல்லாப் பிரச்சினைகளுக்குமான தீர்வாக அமையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

நோர்வே தொழிற்கட்சியின் அனைத்துலக விவகாரங்களுக்கான மையம் மற்றும் நோர்வே தமிழர் கற்கை மையம் ஆகியனவற்றின் கூட்டு ஏற்பாட்டில் போர் முடிபடைந்த மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரான இல்ங்கைத்தீவு என்ற தலைப்பில் கடந்த மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக ஒஸ்லோ சென்றிருந்த போது அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஜனநாயகக் குறைபாடு நிலவுவதாக முன் வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் கேட் கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இதில் ஓரளவுக்கு உண்மை இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐந்து கட்சிகளான கூட்டாக இருக்கின்றது.

அந்தக் கூட்டு என்பது மிகத் தளர்வானதொரு கூட்டணி . அது இப்போது ஒரு கட்சியாகச் செயற்படவில்லை. ஒரு கூட்டாகத்தான் இன்னமும் இருக்கின்றது. முன்பு தமிழரசுக் கட்சி, காங்கிரஸ் கட்சி போன்றன இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானது. பிற்பாடு தமிழர் விடுதலைக் கூட்டணியே ஒரு கட்சியாகப் பரிண மித்தது. இந்நிலையில் தமிழரசுக் கட்சி காங்கிரஸ் கட்சிக்கான செயற்பாடுகள் இல்லாமல் போயின.

அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு கட்சியாகப் பரிணமிக்க வேண்டும். ஒரு கட்சியாக அதற்குரிய கட்டமைப்பு முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கானதொரு மத்திய குழு, செயற்குழு, தலைவர் , செயலாளர், பொருளாளர், மாவட்டச் செயற்குழு போன்ற கட்டமைப்பு உருவா க்கம் பெற வேண்டும். இன்னும் சரியாகச் சொல்லப் போனால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன மாக, இயக்கமாக மாற்றப்பட வேண்டும். ஆனால் தமிழரசுக் கட்சி இதற்கு ஒத்துழை க்கவில்லை. ஒரு கட்சியாகப் பரிணமிப் பதை அவர்கள் விரும்பவில்லை.

இப்புறநிலையில் ஜனநாயகம் தழுவிய காத்திரமான போராட்டங்களை முன்னெடு த்துச் செல்வதற்கும் மக்கள் மத்தியில் உறு தியான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற் கும் இலங்கை அரசாங்கத்துடனும் அனை த்துலக சமூகத்துடன் ஒருமித்த குரலில் பேசுவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒரு கட்சியாகபரிணமிக்க வேண் டியது அவசியமானதாகும் என்றார். (அ-2)

## யாழ்.மாநகர சபையின் ஆணையாளராக பிரணவநாதன் நேற்று பதவியேற்றார்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் ஆணை யாளராக செ.பிரணவநாதன் நேற்று உத்தியோக பூர்வமாக பதவி ஏற்றுள்ளார்.

முன்னர் யாழ். மாநகரசபை யின் ஆணையாளராக இருந்த மு.செ.சரவணபவ ஓய்வு பெற்றுச் செல்வதையடுத்து யாழ். உள் ளூராட்சி உதவி ஆணையாள ராகயிருந்த செ.பிரணவநாதன் இப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான இந்த நியமனத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளார். (அ-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைகழக அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ***அபி விருத்தி நிர்வாகம் சில பார்வைகள்*** என்னும் தலைப்பி லான கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கினை இந்திய புதுச்சேரிப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் கலாநிதி என்.கே.குமரேசன் ராஜா வழங்கவுள்ளார். (அ-7-37)



மனிதனின் பெருமையும் சிறுமையும் அவனவன் இதயத்துக்குள் இருக்கின்றன.

–சீனப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்.போதனா வைத்தியசாலையில் அலையும் ஆத்மாவின் ஆதங்கம் இது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடக்கும் கலாசார சீரழிவுகள் குறித்த கருத்தாடல் ஒன்றில் பங்கேற்றபின்,உறங்குவது கடினமாகவே இருந்தது.

அந்தக் கருத்தாடலில் கலந்து கொண்டவர்கள் கூறியவற்றைக் கேட்டபின் நெஞ்சம் பிளந்துகொண்டது.

எங்கள் இனத்தில் இப்படியொரு நிலையா என்ற சிந்தனைகள் குழப்பம் விளைவித்தனவாயினும் அதனூடே உறங்கிக் கொண்டோம்.

அந்த உறக்கத்தில் ஒரு கனவு.

வெள்ளை நிற ஆடை அணிந்த ஓர் உருவம், கண்ணீர் சிந்தியபடி விம்மிக் கொள்கிறது.

அந்த விம்மல் ஓசையைப் பொறுக்கமுடியாமல் ஐயா! நீங்கள் யாரென்று வினவினேன்.

அதற்கு அந்த உருவம், பதில் அளித்தது.

நான் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த ஓர் ஏழைமகன். என் உயிர் பிரிந்ததற்கு நோய்தான் காரணம் என்று இறப்புச் சான்றிதழ் எழுதியிருந்தாலும்,

உண்மையில்,என்இறப்புக்குஅதுகாரணம்அல்ல.

எனக்கான சிகிச்சையை உடனடியாக ஆரம்பிக்கப்படாமையும்,ஆரம்பித்த சிகிச்சையில் உள்ள தவறுகளுமே என்னை இந்தப் பூமியில் வாழ முடியாமல் செய்துவிட்டது.

என் இழப்பால் என் குடும்ப உறவுகள் கதறி அழுது கண்ணீர் விட்டனராயினும்,விதியின் விளையாட்டு என்று அவர்கள் தங்களைத் தாங்களே ஆற்றிக் கொள்கிறார்கள்.

ஆனால், இறப்புக்குப் பின்புதான் என் சக்திமிக்க ஆன்மா என் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிந்தது.

அதனால் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் நடப்பது என்ன என்பதை அறிதற்காக இராப்பகலாக அந்த வைத்தியசாலையிலேயே திரிகின்றேன்.

ஓ! கடவுளே ! மிகச் சிறந்த உன்னதமான – அமைதியான மருத்துவர்கள் ஒருசிலர்.

அவர்களை மடக்கி, மட்டந்தட்டி தங்கள் அதிகாரங்களைச் செலுத்தி அநியாயம் செய்யும் இன்னொரு தரப்பு மருத்துவர்கள்.

இதற்கப்பால் யாழ்ப்பாண மண்ணில் இனப்பற்றோடு கடமையாற்றும் துடிப்புள்ள வைத்தியர்கள் இப்படியானதொரு அமைப்பை காண முடிகின்றது.

அனேகமான இடங்களில் நல்லவர்கள் அமைதியாக இருந்துவிடுவதால், தாம் சார்ந்த துறைகளில் சிறப்புத் தேர்ச்சி இல்லாதவர்களும் வருமானத்தை மட்டும் உள்நோக்கமாகக் கொண்டவர்களும் தாங்கள் இட்டதே சட்டம் என்று சன்னதம் ஆடுகின்றனர்.

அதேவேளை, புரட்சிகர எண்ணம், புதுமை படைக்கும் சிந்தனை, எங்கள் மக்களுக்கு–எங்கள் மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற உயர்ந்த உள்ளம் கொண்ட மருத்துவர்கள். இத்தகையவர்கள் பல்வேறு இடையூறுகளைச் சந்திக்கும் அபத்தங்கள். சிலவேளைகளில் இவர்களை இடமாற்றியே ஆக வேண்டும் என்ற எதிர் சக்திகளின் சதித்திட்டங்கள். அதனால் கடமை உணர்வு மிக்கவர்களின் வெளியேற்றங்கள் என்றவாறு யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை படாப்பாடுபடுகின்றது.

என்னசெய்வது! காசுக் கலாசாரம் கடவுளாக மதிக்கப்படும் மருத்துவர்களின் மனங்களை மாற்றிவிட்டது.

அதனால்... (நாளை தொடரும்)

# தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம்; வெளிநாட்டு தூதுவர்கள் ஆராய்வு

## மனோவை கொழும்பில் சந்தித்தனர்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் கூடுதல் கவனத்தை செலுத்தியுள்ளன.

இவ்விவகாரம் தொடர்பில் அந்நதந்த நாடுகளின் இலங்கையிலுள்ள தூதுவர்கள் விசேட அவதானம் செலுத்தி வருவதாக அறிவித்துள்ளனர்.

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனை சந்தித்த மேற்படி நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் இவ்விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு நகர்வுகளையும் மிக உன்னிப்பாக நாம் அவதானித்து வருகின்றோம்.அதில் தங்களின் பங்களிப்பு அதிகபடியாக உள்ளதையும் அறிகின்றோம் என்றும் குறித்த மூன்று நாடுகளின் தூதுவர்களும் மனோகணேசனிடம் தெரிவித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் சில தரவுகள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் மேலும் சில விடயங்களைப் பெற்றுக்கொண்டு வரவுள்ளனர் என்றும் அந்த நாடுகளின் தூதுவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தாவுக்கும் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசனுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இந்த வாரமளவில் இடம் பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விவகாரம் மற்றும் மலையக மக்களின் பிரச்சினை தொடர்பாகவும் இந்திய எதிர்க்கட்சித் தலைவியிடம் சமர்ப்பிக்கப்பட்ட மனு தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டு கலந்துரையாடப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ–2)

# துமிந்தவிடம் வாக்குமூலம் பெறாமல் வழக்கை முன்னெடுத்துச் செல்வது சிரமம்

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

வெளிநாட்டில் சிகிச்சை பெற்று வரும் சந்தேகநபரான துமிந்த சில்வாவிடம் வாக்கு மூலம் பெறாமல் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கை தொடர்ந்து முன்னெடுக்க முடியாதுள்ளதாக சட்டமா அதிபர் நேற்றைய தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான அரச வழக்கறிஞர் மாதவ தென்னக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரான துமிந்த சில்வாவின் தற்போதைய உடல் நிலையைக் கொண்டு அவரிடம் வாக்குமூலம் பெற முடியாதென தெரிவித்த வழக்கறிஞர் வாக்குமூலம் பெறுவதற்கு குறிப்பிட்ட கால அளவைக்கூற முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

அதனால் இந்த வழக்கில் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதும் எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அரச வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

இதேவேளை கொலை வழக்குடன் தொடர்புடைய அனைத்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ–2)

# தங்கூசி வலைகள் தீயுடன் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகள் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு நேற்று தீயிட்டு எரிக்கப்பட்டது.

குறிகாட்டுவான், குருநகரினைச் சேர்ந்த மீனவர்களிடமே இவ்வலைகள் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றங்களின் உத்தரவுக்கமைய எரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1992 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க கடற்றொழில் சட்ட விதிகளின் கீழும் 2006 ஆம் ஆண்டு ஒழுங்கு விதிகளின் படியும் தங்கூசி வலைகள் உட்பட டைனமற் பாவித்தல், அனுமதிப்பத்திரம் இன்றிய படகுப்பாவனை, இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடி போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன.

தீயிட்டு எரிக்கப்பட்ட வலைகள் சுமார் 50 ஆயிரம் பெறுமதியாவை என்றும் இதுவரை யாழில் 13 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடற்றொழிலாளர்கள் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடுவதனை தடுப்பதற்காகவே இவ்வலைகள் எரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் கணேசமூர்த்தி தெரிவித்தார். (அ–4)

## சிங்கள மொழி பயிற்சி வகுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினரால் சிங்கள மொழி பயிற்சி வகுப்பு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வளவாளராக சபையின் முன்னாள் செயலாளரும் உள்ளூராட்சி அமைச்சின் தற்போதைய நிர்வாக உத்தியாகத்தருமாகிய வே.சிவராஜலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் மாணவர்களையும் உத்தியோகத்தர்களையும் கலந்து பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ–3–29)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப்போட்டிக்கான பரிசளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

இப்பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை மாலை 8 மணிக்கு அம்பாள் ஆலய முன்றலில் ஆர். ரஞ்சித் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களான பே. திருவாதவூரர், வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி கிரியாகலா முக்தாமணி சிவஸ்ரீ ச. மகேஷ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்கவுள்ளார். (அ–7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அதிகம் பெருமைப்படாதே!



நல்ல நூல்களைப் படிப்பது, சொற்பொழிவுகளை நடத்துவது இவற்றைவிட அன்பால் மட்டுமே ஆன்மீகத்தில் மேம்படமுடியும்.

தேவையற்ற சிந்தனைகளை விட்டுவிட்டு மனப்பூர்வமாக இறைவனை வழிபட்டால் அவன் இருப்பதை உணரலாம்.


பக்தனாக விரும்புகிறவன் சொர்க்கத்தை அடைவது போன்ற ஆசைகளை ஆரம்பத்திலேயே விட்டுவிடவேண்டும்.

வெறுப்பையும் கோப உணர்ச்சியையும் அடக்கும் போது அந்த அளவிற்கு நல்ல ஆற்றலைச் சேமிக்கின்றோம். அந்த ஆற்றல் உயர்ந்த ஆன்மீக் சக்தியாக மாறுகிறது.

ஆன்மீக அறிவால் மட்டுமே நமது துன்பங்களை என்றென்றைக்கும் ஒழிக்க முடியும். ஏனைய அனைத்து அறிவும் அதைக்குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே நீக்கும்.

உன்னைப்பற்றி அளவுக்கு மீறி பெருமைகொள்ளாதே. பிறர் பெறாத அந்தப்புகழை உனக்கு அளித்தது இறைவனின் அருளே. அதை ஒரு வழிபாடாகச் செய்.

# ஈராக் கார்க்குண்டு வெடிப்பில் 22 பேர் உயிரிழப்பு;65 பேர் காயம்



ஈராக்கில் நடந்த கார்க் குண்டு வெடிப்பில் 22 பேர் கொல்லப்பட்டனர். 65 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. ஈராக் தலைவர் பக்தாத்திற்கு வடக்கே உள்ள ஒரு வழிபாட்டுத் தலம் தொடர்பாக ஷியா மற்றும் சன்னி பிரிவினரிடையே பிரச்சினை இருந்து வருகின்றது.

இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. இந்நிலையில் பக்தாத்தின் மத்திய பகுதியில் உள்ள பாப் அல்- மவுதாம் என்ற ஷியா பிரிவு அறநிலையத்துறை அலுவலகத்துக்கு வெளியே நேற்றையதினம் காலை வெடிகுண்டுகள் நிரம்பிய காரைத் தற்கொலைப் படைத் தீவிரவாதி ஒருவர் வெடிக்கச் செய்துள்ளார்.

இந்தக் கொடூரமான தாக்குதலில் 22 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 65 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கார்க் குண்டு வெடிப்பில் அந்த அறநிலையத்துறை அலுவலகம் தரைமட்டமாகிவிட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தாக்குதல் குறித்து பக்தாத் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-2)

# லிபிய விமான நிலையத்தை கைப்பற்றிய தீவிரவாதிகள் தலைவரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்து

(கெய்ரோ)

லிபியாவில் இடம்பெற்ற பொது மக்களின் போராட்டம் காரணமாக ஜனாதிபதி கடாபி ஆட்சி வீழ்ந்தது. அதைத் தொடர்ந்து புரட்சிப் படையினரால் கடாபியும் கொல்லப்பட்டார். தற்போது இடைக் கால அரசு பதவியில் உள்ளது.

எனவே, அங்கு தீவிரவாத குழுக்கள் தலையெடுக்க தொடங்கி உள்ளன. நேற்று இரவு திரிபோலியில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் டார்மாக் சர்வதேச விமான நிலையத்துக்கு அல்-அவ்பியா தீவிரவாதிகள் சுமார் 200 பேர் வாகனங்களில் வந்து குவிந்தனர்.

பின்னர் துப்பாக்கி முனையில் அந்த விமான நிலையத்தைக் கைப்பற்றினர். துப்பாக்கிகளுடன் விமான நிலையங்களை முற்றுகையிட்டனர். இதனால், விமான போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டது. இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

விமான நிலையத்தைக் கைப்பற்றிய தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதால் பீதியடைந்த பயணிகள் அலறியடித்தபடி அங்குமிங்கும் ஓடினர். அதில் 10 பேர் காயம் அடைந்தனர்.

அல்-அவ்பியா தீவிரவாத அமைப்பின் தலைவர் அபு ஓயிஷிலா அல்-ஹெப்சி என்பவரை டிரிபோலி பாதுகாப்பு குழு கைது செய்தது. அவரை விமானம் மூலம் வேறு இடத்துக்கு கொண்டு செல்வதாக தகவல் கிடைத்தது. எனவே, அவரை மீட்டு கடத்தி செல்லவே விமான நிலையத்தை தீவிரவாதிகள் முற்றுகையிட்டதாகக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட தங்கள் தலைவரை விடுதலை செய்யும்படி தீவிரவாதிகள் வலியுறுத்தி உள்ளனர். மேலும், அரசுக்கு கெடு விதித்துள்ளனர். இதற்கிடையே, ஆயுதங்களை ஒப்படைத்து சரணடையும்படி அவர்களை டிரிபோலி பாதுகாப்பு படையினர் கேட்டுக் கொண்டனர். அதை அவர்கள் ஏற்கவில்லை. எனவே, அங்கு பதற்றம் நிலவுகிறது. (அ-2)

# சிங்கப்பூர் பணிப்பெண்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் தடை விதிப்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் ஜன்னல் சுத்தம் செய்யும் போது பணிப்பெண்கள் தவறி விழுந்து பலியாவதால் அவர்கள் இதுபோன்ற பணிகளை செய்ய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

சிங்கப்பூரில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் , வங்கதேசம், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த இரண்டு இலட்சம் பெண்கள் வீட்டு வேலை செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

பல அடுக்குக் கொண்ட குடியிருப்புகளில் வேலை செய்யும் பணிப்பெண்கள் பல்கனியில் துணி காய வைக்கும் போதும் ஜன்னல்களை சுத்தம் செய்யும் போதும் தவறி கீழே விழுந்து விடுகின்றனர். இந்த ஆண்டில் மட்டும் ஒன்பது பெண்கள் இது போன்று கீழே விழுந்துள்ளனர். இவர்களில் ஏழுபேர் இறந்து விட்டனர்.

இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதால் ஜன்னலை சுத்தம் செய்யும் பணியில் உரிய கண்காணிப்பு இல்லாமல் பணிப்பெண்கள் இந்த வேலையை செய்யக்கூடாது என சிங்கப்பூர் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் அறிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)



டில்லியில் நடைபெற்ற மாநிலங்களுக்கான ஆண்டு திட்டம் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவை வரவேற்கும் திட்டக் குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியாவைப் படத்தில் காணலாம்.

# சாவேஸ் சில மாதங்கள் மட்டுமே உயிர்வாழ்வார்

## மருத்துவ அறிக்கை கூறுகிறது



வெனிசுலாவின் ஜனாதிபதி ஹுகோ சாவேஸ் புற்றுநோயால் அவதிப்பட்டு வருவதாகவும் சில மாதங்கள் மட்டுமே உயிர் வாழ்வார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் அவர் எலும்பு நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் ஒக்டோபரில் வெனிசுலா நாட்டில் நடக்கவுள்ள தேர்தலில் 3 ஆவது முறையாக போட்டியிட பதிவு செய்துள்ளார். எனினும் தேர்தலுக்கான முடிபு வெளிவரும் போது அவர் இருப்பது சந்தேகமே என அவரது மருத்துவ அறிக்கை தெரிவிக்கி றது. (அ-2)

# பொப்பிசை பாடலில் கலந்துகொள்ளும் வாய்ப்பை இழந்த இளவரசர் பிலிப்




பிரிட்டன் ராணியாக எலிசபெத் அம்மையார் முடிசூடி 60 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி லண்டனில் வைரவிழா நான்கு நாட்கள் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

விழாவின் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் பக்கிங்ஹாம் அரண்மனையில் பிரம்மாண்ட பொப் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ராணி எலிசபெத்துடன் அவரது கணவர் இளவரசர் பிலிப்பும் கலந்து கொள்வதாக இருந்தது.

ஆனால் திடீரென ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக இளவரசர் பிலிப் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ள அவர் பொப் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியைக் காண்பதற்காக பக்கிங்ஹாம் அரண்மனைக்கு வெளியே கூடியிருந்த பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் முன்னிலையில் இந்த அறிவிப்பு வெளி யிடப்பட்டது.

90 வயதான இளவரசர் பிலிப் நேற்று முன்தினம் தேம்ஸ் நதியில் நடைபெற்ற அலங்கார அணிவகுப்பில் கலந்து கொண்ட போது மிகவும் ஆர்வத்துடன் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# விமான விபத்தில் உயிர் நீத்தவர்களுக்கு 3 தினங்களுக்கு துக்கம் அனுஷ்டிப்பு



நைஜீரியாவின் பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்கு உள்ளாகியதில் அதில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுமார் 150 பயணிகளுடன் பயணித்த இவ்விமானம் நைஜீரியாவின் பிரதான நகரான லாகோஸில் அண்மையில் விபத்துக்குள்ளாகியது.

இதில் பயணித்த எவரும் உயிர்த்தப்பவில்லை என் தெரிவித்துள்ள அந்நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை இந்த விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட்வர்கள் விமான விபத்து இடம்பெற்ற இடத்தில் ஒன்று கூடியுள்ளதோடு மீட்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விமான விபத்தினைத் தொடர்ந்து எதிர்வரும் மூன்று தினங்களையும் துக்க தினமாக நைஜீரிய ஜனாதிபதி குட்லக் ஜொனாதன் அறிவித்துள்ளார்.

அதேவேளை இவ்விமான விபத்துக்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அசாமில் பெய்த கன மழையால் 30 கிராமங்கள் நீரில் மூழ்கின

## 20 ஆயிரம் பேர் பரிதவிப்பு

இந்தியாவின் வடகிழக்கு மாநிலம் அசாமில் கடந்த 2 நாட்களாகப் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 30 கிராமங்கள் நீரில் மூழ்கி தத்தளிக்கின்றன.

அசாமின் உதால்குரி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாகப் பெய்து வரும் கன மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக 20 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் பாடசாலைகளிலும் உயரமான பகுதிகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே ஏராளமான கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. 30 கிராமங்கள் நீரில் தத்தளிக்கின்றன.

மழை-வெள்ளம் காரணமாக உதால்குரி மாவட்டத்தில் உள்ள தொலைதூரப் பகுதியான பேர்கானுக்குச்சாலை வசதி துண்டிக்கப்பட்டுள்ளது. வெள்ள நிலைமையை மாவட்ட நிர்வாகம் கண்காணித்து வருகிறது. (அ-2)

# மணலில் சறுக்கி விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தோப்பு பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கரவெட்டி கோவில் சந்தியைச் சேர்ந்த ஐயாத்துரை ஜெயக்குமார் (வயது 48) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

வீதி திருத்துவதற்காக வீதியில் குவிக்கப்பட்டிருந்த மணலில் சறுக்குண்டதால் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை பிரஸ்தாப நபர் காயங்களுடன் மயக்கமான நிலையில் வீதியில் கிடந்தபோது அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல எவரும் முன்வரவில்லை எனவும் அருகில் உள்ள ஆலயம் ஒன்றில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தபோதும் பெருமளவானோர் அங்கு நின்றதாகவும் எனினும் காயமடைந்தவரை எவரும் காப்பாற்றாது வேடிக்கை பார்த்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட அவர், அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-11)

# இளம்குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(காரைநகர்)


காரைநகர் கொட்டபுலத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தினைச் சேர்ந்த நல்லதம்பி புஸ்பராசா (வயது 28) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவரின் வீட்டின் அருகே உள்ள மரமொன்றில் தொங்கிய நிலையில் நேற்று மாலை 3.30 மணியளவில் அவரின் சடலமானது மீட்கப்பட்டது.

ஊர்காவற்துறைப் பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேதப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-11-246)

# பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ்: நடப்பு சம்பியன் லீ நா அதிர்ச்சித் தோல்வி



இடம்பெற்று வரும் பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் சுற்றுத் தொடரில் சீனாவின் முன்னணி வீராங்கனை லீ நா எதிர்பாராத விதமாகத் தோல்வியைச் சந்தித்துள்ளார். 142-வது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள் கஸகஸ்தான் வீராங்கனையிடமே அவர் தோல்வியைச் சந்தித்துள்ளார். 4-ம் சுற்று ஆட்டத்தில் மோதிய லீ நர், கஸகஸ்தானின் யாரோஸ்லாவா ஸ்வோடோ வாவிடம் 6-3,2-6, 0-6 என்ற கணக்கில் தோல்வியடைந்தார். முதலாவது செட்டில் சிறப்பாக ஆடிய லீ நா, பின்னர் அதேயளவு திறைமையை அடுத்த 2 செட்களிலும் வெளிப்படுத்த தவறியிருந்தார்.

பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ் தொடரின் கடந்தாண்டுத் தொடரில் சம்பியன் பட்டம் வென்றிருந்த லீ நா, நடப்பு சம்பியனாக தனது பட்டத்தை இந்தாண்டும் தக்க வைத்துக் கொள்ளும் எதிர்பார்ப்பில் களமிறங்கியிருந்த போதிலும், 4 வது சுற்றுடனேயே வெளியேறியுள்ளார்.

லீ நாவின் தோல்வியை அடுத்து தற் போது பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் தொடரின் தனிநபர் பெண்கள் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன்கள் யாரும் அடுத்த சுற்றில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க.-கூட்டமைப்பு...

இடம்பெற வைப்பதற்கு ரணில் வகித்து வரும் மத்தியஸ்த நடவடிக்கையின் ஒரு பாகமே இந்தச் சந்திப்பு எனக்கூறப்பட்டாலும் வழமைக்கு மாறாக இந்தச் சந்திப்பில் முக்கிய பல விடயங்கள் அலசி ஆராயப்படவுள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் தேசிய இனபிரச்சினைக்குத் தீர்வைக் காணும் நடவடிக்கைகள் குறித்து புரிந்துணர்வின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் என்றும் தெரியவருகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை அங்கம் வகிக்குமாறும் இதர கட்சிகளை அழைத்து வருமாறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இவ்விடயம் குறித்து ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகைக்கு அழைத்து ஜனாதிபதி நேரடிப் பேச்சில் ஈடுபட்டார். இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களும் அரச தரப்பின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போதே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை இயங்க வைப்பதற்கு எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பு அவசியம் என ஜனாதிபதி குறிப்பிட்டதுடன் இவ்விடயத்தில் ரணிலை மத்தியஸ்தம் வகிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

தமது தரப்புக் கோரிக்கைகளை ஏற்று அவற்றை அரசாங்கம் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குமானால் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவுக்குழுவில் பிரசன்னமாகும் என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் வகையிலான சூழலை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் கோரிக்கைக்கு பதிலுரைத்தார்.

அதுமட்டுமின்றி தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இடம்பெற வைக்கும் நோக்கில் கூட்டமைப்புடன் ரணில் பேச்சுக்களை ஆரம்பித்தார். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் கட்டமே விரைவில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# சட்டவிரோதமாக ஆஸி...

அந்த 151பேரில், 3 பேர் இந்தியத் தமிழர்கள். மேலும், இலங்கைத் தமிழர்களில் 18 பேர், நேரடியாக இலங்கையில் இருந்து சுற்றுலா விசாவில் வந்திருக்கிறார்கள். அவர்களிடம் இலங்கை கடவுச்சீட்டு இருக்கிறது என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதையடுத்து, உரிய ஆவணங்கள் இல்லாமல், சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்ல முயன்றதாக 21 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என கொல்லம் நகர உதவிப் பொலிஸ் ஆணையர் தோம்ஸன் ஜோஸ் தெரிவித்தார்.

இப்படியான படகுகளிலேயே பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர்களை, நீதிமன்றக் காவலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது.

அந்த 21 பேரில், 3 இந்திய தமிழர்களும் அடங்குவர். அவர்களிடமும் வெளிநாடு செல்ல உரிய ஆவணங்கள் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்கள் 18 பேரில் 2 பேர் பெண்கள்.

ஆண்கள் கொட்டாரக்கை சிறையிலும், பெண்கள் கொல்லம் கிளைச் சிறையிலும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். குழந்தைகள் அனைவரும் குழந்தைகள் நல மையத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மீதமுள்ள இலங்கை அகதிகளிடம் தமிழக பொலிஸார் வந்து விசாரணை நடத்தியதாகவும், கேரள மாநில பொலிஸார் கூறுகிறார்கள்.

அவர்கள் அனைவரும் புதன்கிழமை தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களுக்கு அனுப்பப்படுவார்கள் என்று உதவி பொலிஸ் ஆணையர் தோம்ஸன் ஜோஸ் தெரிவித்தார். (எ-11)

# தனி இராச்சியக் கோரிக்கை...

துணிவை ஊட்டியுள்ளது.

இக் குழுக்கள் இலங்கையில் ஒரு தனி அரசை உருவாக்கும் நோக்குடனான தமிழீழப் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ள புலிகளின் எச்சசொச்சங்களாகவே காணப்படுகின்றன.

தமிழகத்திலும் தனி அரசு ஒன்றுக்கான ஆரவாரங்கள் இப்பொழுதும் எழுந்துள்ளன. ஆயினும் இதற்கான வாய்ப்பு ஏற்படப் போவதில்லை. இத்தகைய சூழல் நல்லிணக்கம் ஏற்படுவதைத் தடுக்கவே வழி வகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

த சண்டே இந்தியன் செய்தித்தாளுக்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

**கேள்வி:** தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை பற்றிய மனித உரிமைகள் பேரவையில் நடைபெறக் கூடிய உரையாடலின் தற்போதைய நிலை என்ன?

**பதில்:** இரு விடயங்கள் உள்ளன. முதலாவது அமெரிக்கா, ஐ.நா உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடனான எமது உறவு நிலை.

இரண்டாவது இந்தியாவுடனான எமது உறவு நிலை. தீர்மானத்தினை பொறுத்தவரை அவ்வாறு நடைபெற்றிருக்கக் கூடாது. என்பதே எமது விருப்பம். ஆனாலும் நாம் தொடர்ந்து செயற்படுகின்றோம்.

தீர்மானம் எவ்வகையிலும் இலங்கைக்கு வாய்ப்பாக இருக்கும் என்று நாம் நம்பவில்லை.

**கேள்வி:** பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை ஒரு தோற்றவிட்ட நாடு எனக் கூறியுள்ளார். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் இது போன்ற உணர்வலைகளை வெளியிட்டுள்ளார். இப் பேர்வழிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** இப் பேர் வழிகளையும் அவர்களது சொற் பிரயோகங்களையும் கள நிலைமைகள் பற்றிய புரிதல் முற்றிலுமாக இல்லாதவர்களும் தவறான தகவல்களை பெற்று வைத்திருப்பவர்களுமே பயன்படுத்துகின்றனர். இலங்கைக்கு விஜயம் செய்து கள யதார்த்தங்களை புரிந்து கொண்டவர்கள இத்தகைய சொற்களை பயன்படுத்தமாட்டார்கள்.

**கேள்வி:** மனித உரிமை பேரவையில் இலங்கை எதிர்கொண்டுள்ள சவாலை வெறுமனே இலங்கைக்கும் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய கூட்டிற்கும் இடையிலான ஒரு பிரச்சினை மட்டுமே என்றவாறாக காண்பிப்பதற்கு சில நிபுணர்கள் முனைகின்றனர்.

ஆயினும் இறுதி நாட்களில் இந்தியாவின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் ஒட்டுமொத்த நிலைப்பாட்டையும் மாற்றியிருந்தது. அது எதிர்வு கூறக் கூடியதாக இருந்ததா? திடீரென இடம்பெற்ற ஒன்றா?

**பதில்:** நான் முன்பு கூறியது போன்ற தீர்மானம் துரதிர்ஷ்டவசமானது. அது புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், நல்லிணக்கம் ஆகிய எமது குறியிலக்குகளை எவ்விதத்திலும் வளமூட்டவில்லை. இந் நோக்கங்களை எய்துவதற்கு நாம் சொந்த வழிகளில் முயற்சித்தோம். நாட்டினுள்ளேயே தீர்வுகளை பெறுவதே எமது நோக்கம்.

இயல்பாகவே வேறு எந்த மக்களையும் விட எமது மக்கள் பற்றி நாமே அதிகம் கரிசனை கொண்டவர்கள். இதனால் சர்வதேச சமூகத்தின் தவறான கருத்துக்கள் தவறான பார்வைகள் உதவப் போவதில்லை. ஐ.நா. தீர்மானம் பாதகமான சூழ்நிலையில் கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்தியாவும் வேறு சில நாடுகளும் தமது சொந்தக் காரணங்களுக்காக சாதகமாக (இலங்கைக்கு) வாக்களித்திருக்க முடியும். நாம் தொடர்ந்து முயற்சிப்போம். இந்தியாவுடனான எமது வரலாற்று உறவுகள் வலுவானதாகவே இருக்கும். அயல் நாடுகள் என்ற வகையில் நமது நட்பு நிலை மோசமாக பாதிக்கப்படாத வகையில் நாம் வேறுபட்டு நிற்கும் நிலை இருந்துள்ளது.

**கேள்வி:** ஆயினும் பிராந்தியத்தில் அநேக வாக்குகளை நீங்கள் பெற்றிருந்தீர்கள். இலங்கையின் இராஜதந்திரம் ஆசியா மீது மையம் கொண்டிருந்ததாக ஆய்வாளர் நம்புகின்றனர். ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா விடயத்தில் இவ்வாறு நடைபெறவில்லை. அமெரிக்கத் தீர்மானம் வெற்றி பெற்றமைக்கு இலங்கையின் இராஜதந்திரச் செயற்பாடுகளில் உள்ள பலவீனம் காரணமா?

**பதில்:** உலகின் மிக சக்தி வாய்ந்த நாடு ஒன்றினால் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருந்தது. ஆயினும் தீர்மானத்தின் உள்ளடக்கம் அந்தளவு கவனத்திற்கான சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கவில்லை. இவ்விவகாரத்தை விடவுமே அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டிய வேறு உலக விவகாரங்கள் உள்ளன.

எனவே பிரேரணையை சமர்ப்பித்தவர்களின் உள்நோக்கம் சந்தேகத்திற்குரியது. தீர்மானத்தில் சிபார்சு செய்யப்பட்டவை ஏற்கெனவே படிப்படியான ஒருமுறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எமது மக்களுக்கு அதுவே சிறந்ததென்பதால் அவ்வாறு செய்யப்படுகின்றது.

சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக அல்ல. ஆயினும் தீர்மானமானது எதனை சாதித்துள்ளது என்றால் 'நியூயோர்கில் இயங்கும் புலம்பெயர் தமிழ்க் குழுக்கள், லண்டனில் இயங்கும் உலக தமிழ் மன்றம், நோர்வேயில் இயங்கும் நெடியவனின் இயக்கம் என்பவற்றிற்கு துணிச்சலை ஊட்டியுள்ளது.

இக் குழுக்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கில் தனி அரசை உருவாக்கும் நோக்குடனான தமிழீழப் பிரசாரங்களை முடுக்கி விட்டு வரும் புலிகளின் மிச்ச சொச்சங்களே. தமிழ்நாட்டில் தனியரசு (ஈழம்) ஒன்றிற்கான ஆரவாரங்கள் இப்பொழுது உள்ளன.

ஆயினும் வெற்றி வாய்ப்பு அவர்களுக்கு கிடையாது. இவற்றினால் சூழல் கெட்டு விடுவதற்கும் நல்லிணக்கம் சிக்கலடைவதற்குமே வாய்ப்புகள் அதிகம்.

**கேள்வி:** தீர்மானத்திற்கு முன்னதாக கிலாரி கிளின்டன், அமைச்சர் பீரிஸை அமெரிக்கா வருமாறு அழைத்திருந்தார். பீரிஸ் போக மறுத்தது எதற்காக? அமெரிக்காவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தால் வேறுவகையான விளைவுகள் ஏற்பட்டிருக்காதா?

**பதில்:** இது உத்தேச அடிப்படையானது. அவரவர் வசதிகளுக்கு ஏற்ப நாட்டுத் தலைவர்கள் சந்தித்துக் கொள்வர். அத்தகைய ஒரு சந்திப்பில் இரு தரப்பு விவகாரங்கள் பேசப்படும். தீர்மானம் இரு தரப்புக்குமே தனி விசேடமானதாக இருக்கும். (எ-11)

# ஊடகவியலாளர் எக்...

மொஹான் பீரிஸுக்கு நீதிமன்றம் அழைப் பாணை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மொஹான் பீரிஸ் நீதிமன்றில் சாட்சியமளிக் கையில் எக்னெலிகொட வெளிநாட்டில் உள் ளார் என புலனாய்வு அறிக்கைகள் கூறிய தன் அடிப்படையிலேயே தான் கூறியதாக தெரிவித்தார்.

அவர் உயிருடன் உள்ளாரா இறந்து விட் டாரா என்பது எனக்குத் தெரியாது கடவுளுக்கு மாத்திரமே தெரியும். அவர் எங்கிருக்கிறார் என்பது அரசாங்கத்துக்கு கூடதெரியும் என நான் எண்ணவில்லை என முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் கூறினார்.

எக்னெலிகொட வெளிநாட்டில் உள்ளார் என தகவல் தெரிவித்த நபர் அல்லது திணைக் களம் நினைவில் உள்ளதா என மனுதாரரான திருமதி எக்கெலிகொட சார்பில் ஆஜரான வழக்குரைஞர் கேட்டபோது எனக்கு நினை வில்லை என மொஹான் பீரிஸ் பதிலளித்தார். சுமார் ஒன்றரை மணித்தியாலயங்கள் அவர் நீதிமன்றில் சாட்சியமளித்தார். பிரதிவாதி தரப்பு வழக்குரைஞரினால் அவர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. (எ-11)

# கொண்டலடி விநாயகர்...

நிலையத்தில் தேவஸ்தானத்தின் பொருளாளர் செ.நகுலேஸ்வரன் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டை பதிவு செய்த யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டில் இந்து ஆலயங்களை மையப் படுத்திய திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. இவற்றை தடுத்துநிறுத்த வேண்டும் என இந்து சமய அமைப்புக்களும், புத்திஜீவிகளும், ஏனைய பொது அமைப்புக் களும் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத் துள்ளன.

இருப்பினும் இந்து ஆலயங்களை மையப் படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின் றன. இதனால் இந்து மக்க ளின் மனங்களில் விரக்தி ஏற்பட்டுள்ளது

பல இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆலயச் சொத்துக்கள் இவ்வாறு திருட்டுப் போவதனால் ஆலயங்களின் பொலிவும் மங்கிப்போகின் றது.

இராணுவம், மற்றும் பொலிஸ் வீதிக்கு வீதி சோதனைச் சாவடிகளில் காவலுக்கு அமர்த் தப்பட்டுள்ள போதும் பாரியளவில் நன்கு திட்ட மிட்டு மேற்கொள்ளப்படும் திருட்டுக்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது..

சுவாமியை வைத்து காவிச் செல்லும் மரத் திலான வாகனங்களை ஒருவர் இருவரினால் திருடிச் செல்ல முடியுமா? எனவும். வீதிக்கு வீதி சோதனையில் ஈடுபடும் இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் தெரியாமல் கொண்டு செல்ல முடியுமா எனவும் பலதரப்பட்டவர்களினாலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (எ-6)

# இளம் பெண்...

பகுதியிலுள்ள இளம் பெண்ணொருவரை ஹயஸ் வானில் வந்த இளைஞர்கள் சிலர் வாகனத்தில் தூக்கிப் போட்டுக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து குறித்த பெண்ணின் உறவினர் அவசர பொலிஸ் உதவியை (119) நாடியுள்ளனர். இந்த அறிவிப்பையடுத்து உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் குறித்த வாகனத்தை கொடிகாமத்தில் வைத்து மடக்கி பிடித்துள்ளனர்.

குறித்த பெண்ணுக்கும் கண்டியிலுள்ள ஆணுக்கும் இடையில் ஏற்பட்ட காதலையடுத்து அவர்கள் இருவரின் சம்மதத்துடனேயே இந்த கடத்தல் நாடகம் இடம்பெற் றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ-11)

# அமெரிக்கா...

கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குபதிலளித்தஅமைச்சர்நிமால்சிறிபால டி சில்வா கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் அமெரிக்க இரா ஜாங்க செயலகத்துக்கு விளக்கம் மாத்திரமே அளிக்கப்பட்டதாக தெரிவித்தார். (எ-11)

# சனல் 4 இன்...

குறிப்பிடுகின்றன.

இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்தி லும், அதற்கு பின்ன ரும் வெவ்வேறு கட வுச் சீட்டுக்களில் இவர் கள் இருவரும் இலங் கைக்குபயணம்செய்த தாக புலனாய்வுத்துறை யை மேற்கோள்காட்டி இச்செய்திகள்தெரிவிக் கின்றன.

இலங்கையில்இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரில் மேற்கொள் ளப்பட்ட போர்க்குற் றங்கள் தொடர்பில் இரு ஆவணப்படங்க ளைத் தயாரித்த சனல் 4 தொலைக் காட்சி யின் சார்பில் மற்று மொரு ஆவணப் படத் தை தயாரிப்பதற்கா கவே இவர்கள் இரு வரும் இலங்கைக் குச் சென்றதாக அச்செய்தி கள் அதிகாரிகளை மேற்கோள்காட்டிகுறிப் பிட்டுள்ளன.

அதேவேளை, கொழும்பில் நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கி யுள்ளதாக கூறப்படும் சிராணிபண்டாரநாயக்கவின் கணவரான ஸ்ருவாட் கொஸ்குறோவை பொலிஸார் தேடி வரு வதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ-11)


## தவறிவிட்டது

க.சதீஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (751021704V), சாரதி அனுமதிப்பத்திரம், திணைக் கள அடையாள அட்டை மற்றும் ஒரு தொகைப்பணம் என்பன அடங்கிய பேர்ஸ் மானிப்பாய் கொமர்ஷல் வங் கிப்பகுதிக்கும் பண்டத்தரிப்புக்குமிடை யில் காணாமல் போயுள்ளது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்துதவவும்.
தொடர்புக்கு :- 0779581534
(சி-174)

யாழ் நகரில் .....
உங்கள் அனைத்து வைத்திய சேவைகளுக்கும் .....
## சாந்தம் வைத்தியசாலை

வெளிநோயாளர் பிரிவு (OPD)
உள்நோயாளர் பிரிவு (IPD)
ஆய்வுகூட வசதி (Laboratory)
சகல இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனைகளும் உடனடியாகச் செய்து கொள்ளலாம்!
ECG, Scanning வசதி
Home Visit நடமாட முடியாத நோயாளர்களுக்கு வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிக்கப்படும்.
விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
நீரிழிவு நோயாளர்களுக்கான இலவச ஆலோசனை!
வெகுவிரைவில் சத்திர சிகிச்சை, மகப்பேற்று விடுதி ஆரம்பம்!
இல. 126, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
021 567 6577


## நீங்கா நினைவுடன்
## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 30 10 1962

விண்ணில் 02 06 2007



### அமரர் திருமதி லோகேஸ்வரன்-சூரியகலா

திதி:துதியை 06.06.2012

ஆறாத்துயரினிலே ஆண்டுதோறும் அழுகின்றோம்
மீண்டும் வருவாயா எம் இதயத்தில் உறைபவளே
பற்றுள்ள பாசங்களை பரிதவிக்கவிட்டதேனோ
அன்புக்கினியவளே ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்

உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாரதி வீதி - கம்பர் மலை,
உடுப்பிட்டி வடக்கு.

(சி-170)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


## வேலையாட்கள் தேவை

விற்பனையாளர், கணக்கு பதிவாளர் ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்
சிவன் மாளிகை லிமிட்டட்
166, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2996
(8576)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 22 ✵ 05 ✵ 1937

உதிர்வு 08 ✵ 05 ✵ 2012



### அமரர் தம்பு சித்திரம்

கடந்த 08.05.2012 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 07.06.2012 வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள தால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

அபிதா மரக்காலை,
அண்ணா சிலையடி,
கரணவாய், கரவெட்டி

தகவல் : த.ரவிச்சந்திரன் (மகன்)
உரிமையாளர்-வேலுப்பிள்ளை
மரக்காலை, சாமியன் அரசடி,
கரவெட்டி.

(சி-172)


## Diploma

MS Office, DTP,
Web Design, Hardware with Networking,
Accounting, Autocad-2D &3D, Multimedia
Diploma கற்கும் அனைவரும் DTP, Web Design கற்கை நெறிக்கட்டணம் இன்றி கற்கலாம்
மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUSடன் நேரில்
MCAI CAMPUS
SMS Your name & Course to 77 5 520 940 & Get Schol.
243, Adiyapatham Road, Kalviyankadu
Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience
Www.mcaicampus.info
Supported by Jaffna Computer Society
Closing Date 07.06.2012

## உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட சலுகைகள்!
மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.
DHL WORLDWIDE EXPRESS
கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங் கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட
DHL WORLDWIDE EXPRESS



திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.
T.P : 021 222 7835


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.